# ஆட்சி மன்றக் கூட்டத் தொடர் கலைக்கப்படுகிறது


Registered as a Newspaper in Ceylon   வார மலர் ★ விலை சதம் 20



பாலக்காடு
RVG
பீடிகளையே
உபயோகியுங்கள்



# ஈழநாடு
EELA NADU



மில்க்வைற் லசோப்
மேலுறைகளைக் கவனித்து வாங்குங்கள்
போலி உறைகளால் ஏமாறுதீர்கள்
**மில்க்வைற் சோப்**
தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.



மலர் 11   சௌமிய ஆனி 8   ரபி;ஆகி 6   (22-6-69)   ஞாயிற்றுக்கிழமை   இதழ் 10


## ஜூலை 10-ல் புதிய கூட்டத் தொடர் ஆரம்பம்

கொழும்பு, சனி

ஆட்சிமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடர் இம்மாதம் 25ந்திகதி புதன் கிழமையிலிருந்து கலைக்கப்படுவதாகவும் ஐந்தாவது கூட்டத் தொடர் அடுத்த மாதம் 10ந்திகதி காலை ஆரம்பமாகுமென்றும் நேற்று நள்ளிரவு வெளியான விசேஷ வர்த்தமானியில் கவர்னர் ஜெனரல் அறிவித்திருக்கிறார்.

ஜூலைமாதம் 10ம் திகதி ஆட்சிமன்றக் கீழ்சபைக் கட்டடத்தில் ஆட்சிமன்றத்தின் இரு சபைப் பிரதிநிதிகளும் கூடியிருக்கும் கூட்டுக் கூட்டத்தில் கவர்னர் ஜெனரல் சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்துவார். தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின் கவர்னர் ஜெனரல் நிகழ்த்தும் கடைசிச் சிம்மாசனப் பிரசங்கம் இதுவாகத்தானிருக்கும். கடந்த நான்கு ஆண்டுகளிலும் தேசிய அரசாங்கம் செய்த சாதனைகளையும் அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன் செய்யவிருக்கின்ற திட்டங்களையும் சிம்மாசனப் பிரசங்கத்தில் அரசாங்கம் விளக்கிக் கூறவிருக்கிறது.

### மாவைக்கோவில் கதவுகள் திறக்கப்படாவிட்டால்

# சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க ஹரிஜனர்கள் திட்டம்

## கொடியேற்றத்தன்று ஆரம்பமாகும்



யாழ்ப்பாணம், ஞாயிறு

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலை பாகுபாடின்றி சகலருக்கும் திறந்து விடும்படி விடுத்த கோரிக்கைகள் யாவும் பயனளிக்க வில்லையெனில் மாவிட்டபுரம் ஆலயத்தின் முன் கொடியேற்றத் தினத்தன்று முதல் திருவிழாக்காலம் முடியும்வரை சாகும்வரை உண்ணாவிரதமிருக்கத் தாங்கள் ஏற்பா செய்து வருவதாகவும் இதில் எந்தக் கட்சியோ, எந்த இயக்கமோ மட்டும் அல்லாது தீண்டாமை ஒழிப்பில்அக்கறையும் ஆர்வமும் உள்ள அனைவரும் கலந்துகொள்வார்களென்றும் தீண்டாமை ஒழிப்பில் சம்பந்தப்பட்டுள்ள பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டமோ பலாத்காரமோ எதுவுமில்லாமல் அமைதியான முறையில்ஆலயத்தின் முன்னுல் சுமார் 50 பேர்வரை கொடியேற்றத்தன்றிலிருந்து ஆலயக் கதவுகள் திறக்கப்படும்வரை அல்லது திருவிழா முடியும் வரை உண்ணாவிரதம் இருப்பார்களென்று அவர் சொன்னுர்.

வேறு எந்த நடவடிக்கையும்சாதிக்காத சாதனையை உண்ணாவிரதம் சாதிக்குமென்ற நம்பிக்கை தங்களுக்கு இருப்பதாகவும்அவர் கூறினுர்.

### முன்மாதிரி

புங்குடுதீவு, சனி

புங்குடுதீவு அரசினர் ஆஸ்பத்திரியில் கடந்த மூன்று மாதகாலமாகப் பழுதடைந்த நிலையிலிருந்த தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தை பழுது பார்ப்பதற்கு புங்குடுதீவு கல்வி

## லட்சக்கணக்கில் வெளியிடப்படும்

கொழும்பு, சனி

மேற்கு ஆசிய பிரச்னையில் அராபிய நாடுகளின் நிலைக்கு ஆதரவாக ஐ நா.வில்இலங்கைப்பிரதிநிதி ஆற்றிய உரையையும் பிரதமர்கெய்ரோ விஜயம் மேற்கொண்டிருந்தபோது அங்கு அவர் நிகழ்த்திய உரையும் துண்டுப்பிரசுரங்கள் மூலம் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படவிருக்கிறது. லட்சக்கணக்கில் இத்துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப் படவிருக்கின்றன.

## விவசாய முகாம் தீக்கிரை

திருக்கோணமலை, சனி

கந்தளாயில் உள்ள விவசாய முகாம் முழுவதும் தீப்பிடித்து எரிந்து சாம்ப

## நாட்டை விட்டு வெளியேற


## "தமிழ்ப்படத் தடை பற்றி பேசாதீர்"

### மந்திரிகளுக்கு பிரதமர் உத்தரவு


கொழும்பு, சனி

சிங்களத் திரைப்பட வளர்ச்சிக்கு உதவியும் ஊக்கமும் அளிப்பதென்றும் அதற்கான சில நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் மந்திரிசபை தீர்மானித்திருப்பதால் தமிழ்த்திரைப் படங்களின் இறக்குமதியைத் தடை செய்வது பற்றியோ மற்றும் திரைப் படம் சம்பந்தமான சர்ச்சைக்குரிய விஷயங்களிலோ மந்திரிகள் சம்பந்தப்படக் கூடாது என்றும் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா மந்திரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிகிறது.

தமிழ்த் திரைப்படங்களின் இறக்குமதியைத் தடைசெய்வது கட்டுப்படுத்துவது என்று பொது மேடைகளில் மந்திரிகளும் பேசுவது எதிர்க்கட்சியினரின் பிரசாரத்திற்கு அதிக வாய்ப்பளிப்பதாகவே இருக்குமென்றும் பிரதமர் மந்திரிகளிடம் தெரிவித்திருக்கிறுராம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அழகாக அபிநயம் பிடித்து நாட்டியமாடுகிறார்கள் ஈழநல்லூர் சகோதரிகளில் இருவர்! யோகனு, நந்தனு, சாந்தனு ஆகிய இந்தச் சகோதரிகளுடைய நடன அரங்கேற்றம் யாழ். நகரமண்டபத்தில் இசை மேதை சித்தூரரார் முன்னிலையில் நடைபெற்றது.

...(படப்பிடிப்பு ஏ. வி. எம்.)

புங்குடுதீவு அரசினர் ஆஸபத்திரியில் கடந்த மூன்று மாதகாலமாகப் பழுதடைந்த நிலையிலிருந்த தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தை பழுது பார்ப்பதற்கு புங்குடுதீவு கல்வி வளர்ச்சிக் கழகத்தினர் ரூ 100 வழங்கியுள்ளனர். இந்த இயந்திரத்தை உடன் பழுதுபார்ப்பதற்கு சுகாதாரப்பகுதியினர் நடவடிக்கை மேற்கொள்ளாததால் இங்குள்ள நோயாளர்கள் பெருங்கஷ்டம் அனுபவித்து வந்துள்ளனர்,

# ஐந்து ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கை

கோட்டை, சனி

ஐந்து முக்கிய ஆசிரிய சங்கங்கள் தங்கள் அங்கத்தவர்களைச் சியவச லொத்தர் சீட்டுகளைப்பெற்று விற்பனை செய்யவேண்டாமெனக் கோரியுள்ளன.

சிறீலங்கா ஜாதிக குரு சங்கமய, சமஸ்த லங்கா திராவிட குரு சங்கமய, லங்கா ராஜாஜி படஷால திராவிட குருவருங்கே சங்கமய இரண்டாந்தர பாடசாலைகளின் ஆசிரியர் சங்கங்கள் ஆகிய இந்த ஐந்து சங்கங்களுமே மேற்கண்டவாறு தங்கள் சங்கங்களைக் கோரியுள்ளன.

சியவச லொத்தர் சீட்டுகள் எதிர்காலத்தில் தொடர்ந்து இவ்வாறு விற்பனை செய்யப்படுமானுல்இலவசக் கல்வி என்ற முறையே பாதிக்கப்படுமெனவும்கல்வி இலாகா இந்த டிக்கட்டுகளை தாங்கள் திணிக்கவில்லையெனச் சொல்லளவிலேயே கூறுகின்றனவேதவிர ஆசிரியர்களிடம் கொடுக்கப்படும் சீட்டுகள் விற்கப்பட்டாலென்ன விற்கப்படாவிட்டால் என்னஅச்சீட்டுகளுக்குரிய பணத்தை அவர்களே கொடுக்கவேண்டும். எனவேதான் இச்சீட்டு விற்பனையை மாணவர்களும் ஆசிரியர்களும் எதிர்க்க வேண்டும் எனவும் பிரஸ்தாப சங்கங்கள் கோரியுள்ளன.

## சுகாதார மந்திரிக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண முஸ்லிம் மையவாடியின் தடை உத்தரவை நீக்க நடவடிக்கை எடுத்ததற்காக யாழ். மாநகரசபை உறுப்பினர் ஜனுப் எம். ஏ. சி. எஸ். ஏ. காதர், சுகாதார மந்திரி திரு. ஈ. எல். சேனநாயக்காவிற்கு பாராட்டுத் தந்தியொன்றை நேற்று அனுப்பியுள்ளார்.

முஸ்லிம் மையவாடியை மூடுவதென்ற முன்னைய முடிவை, யாழ். மாநகர சபையின் தீர்மானத்திற்கு அமைய செயலில் இறங்கியதற்கு பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன் என அத்தந்தியில் கூறப்பட்டுள்ளது.

வார்களென்றும் தீண்டாமை ஒழிப்பில் சம்பந்தப்பட்டுள்ள பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டமோ பலாத் ... உண்ணாவிரதம் சாதிக்குமென்ற நம்பிக்கை தங்களுக்கு இருப்பதாகவும்அவர் கூறினர்.

# நாட்டை விட்டு வெளியேற பூரிசுவாமிகள் தயாராம்

அம்ரித்தூர், ஜூன். 21

சாஸ்திரங்களுக்கும் தாம் தீண்டாமை பற்றிக் கூறிய கருத்துக்களுக்கும் முரண்பாடு இருந்தால் தாம்தமது மதப்பதவியிலிருந்து விலகி விடவும் பாரதநாட்டை விட்டேவெளியேறிச்சென்று விடவும் தயார் என ஜகத்குரு பூரிசங்கரச்சார்ய சுவாமிகள் இங்கு தெரிவித்தார்.

தீண்டாமை பற்றி பூரி சுவாமிகள் தெரிவித்திருந்த கருத்துக்கு ஏற்பட்டிருக்கும் எதிர்ப்பு சம்பந்தமாகப் பேசுகையிலேயே அவர்மேற் கண்டவாறு எடுத்துக்கூறினர்.

**ஆர்ப்பாட்டம்**

பூரிசுவாமிகள் இங்கு வந்து சேர்ந்த பொழுது மூவாயிரத்துக்கு மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் அவரது விஜயத்துக்கு தமது ஆட்சேபத்தைத் தெரிவித்தனர். கறுப்புக் கொடிகளும் காட்டப்பட்டன. தீண்டாமையை ஆதரித்து அவர் தெரிவித்திருந்த கருத்துசம்பந்தமாக வழக்கொன்று தொடரப் பட்டிருந்தும் விசாரணையின்பின் தள்ளுபடி செய்யப்பட்டதும் தெரிந்ததே.

## ஓய்வு

பருத்தித்துறை, சனி

கடந்த 15 ஆண்டுகளாக நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பிரதம எழுதுவினைஞராக கடமையாற்றி வரும் திரு. வீ. கே. சின்னத்தம்பி ஆட்சிமொழியான சிங்களத்தில் தகுதி பெருத காரணத்தால் கல்விப்பகுதி அவருக்கு சேவைக்கால நீடிப்பை மறுத்துள்ளது.

திரு. சின்னத்தம்பிஅரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்தும் பயனில்லாது போய்விட்டமையால் அவர் இம்மாத முடிவில் பதவியிலிருந்து விலகவேண்டிய நிலையில் இருப்பதாகத் தெரிகிறது,

## விவசாய முகாம் தீக்கிரை

திருக்கோணமலை, சனி

கந்தளாயில் உள்ள விவசாய முகாம் முழுவதும் தீப்பிடித்து எரிந்து சாம்பலானது. இம் முகாம் தீப்பிடித்துக்கொண்டபொழுது சோளகக்காற்று பலமாக வீசிக் கொண்டிருந்ததால் தீயை அணைக்கச் செய்த முயற்சிகள் எல்லாம் தோல்வியடைந்தன.


முகாமில் இருந்த உபகரணங்கள், தஸ்தாவேஜுகள் யாயும் சாம்பலாகியதாகவும் மேற்படி முகாம் தீக்கிரையானதால் லட்சக்கணக்கன ரூபாய் நஷ்டம் எற்பட்டு இருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது. இத்தீவிபத்தின் போது எரிகாயங்களுக்குஇலக்கானவர்கள் தம்பலகம் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

## மின்சாரம் வருகிறது

பருத்தித்துறை, சனி

நெல்லியடிப்பட்டினசபைக்குட்பட்ட பகுதிகளில் இவ்வருடம் புரட்டாதியளவில் மின்சாரம் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மின்சாரக்கம்பங்கள் இப்பொழுது இப்பகுதியில்நாட்டப்பட்டு வருகின்றன. நெல்லியடிப் பட்டினசபைத் தேர்தல் நடக்குமுன்னரே மின்சாரம் கிடைத்து விடுமென்று நம்பப்படுகிறது.



நாவலர் பாவித்ததாகத் தெரிவிக்கப்பட்டு எடுக்கப்பட்ட பட்டாடைகள், பூக்கூடைகள், உருத்திராக்க மாலைகள் நாவலர் சிலை ஊர்வலத்தில் கொண்டு வரப்படுவதற்காக நாவலர் சபையினரால் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

# மின்சார சீர்கேடு பற்றி நேரில் ஆராயப்படும்

## மென்டிஸ் நாளை வருகிருர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மாவட்டத்தில் மின்சார சீர் கேடுபற்றி நேரில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக, அரசாங்க மின்சார திணைக்கள ஜெனரல் மனேசரின் உதவியாளர் தி. மென்டிஸ் நாளை யாழ்ப்பாணம் வருகிருர்.

யாழ்ப்பாண மேயர் திரு. எஸ். நாகராசா, மின்சாரம் பற்றி ஆராய கூட்டிய உள்ளூராட்சிமன்ற தலைவர்கள் மகாநாட்டில் தெரிவு செய்யப் பட்ட குழுவின் செயலாளர் திரு. ஆர். பரமானந்தராசா, இவ்விஷயமாக யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தை சந்தித்தார்.

திரு. ஜி. ஜி பொன்னம்பலம் தலைமையில் சென்ற தூது கோஷ்டி, திரு மென்டிசை சந்தித்து, யாழ்ப்பாண மாவட்டத்துள் உள்ள மின்சார சீர்கேடுபற்றி எடுத்துக் கூறியதை தொடர்ந்து அவர் நேரில்வந்து பார்வையிட சம்மதித்தார்.

யாழ்மாவட்ட உள்ளூராட்சி மன்ற தலைவர்களை திரு. மென்டிஸ் சந்தித்து மின்சார சீர்கேடு பற்றி ஆராய்ந்து ஒருஅறிக்கை சமர்ப்பிப்பார்.

**பரந்தன் ரசாயன தொழிற்சாலை வேலைநிறுத்தம்**

# 51 தற்காலிக ஊழியருக்கு நிரந்தர வேலை; மின்சார தடையினுல் மக்கள் பாதிப்பு

## வேலைநிறுத்தம் பற்றி ஆராய நாளை பாலாதம்பு வருகிருர்

( நமது அலுவலக நிருபர் கா யோகநாதன் )

யாழ்ப்பாணம், ஞாயிறு

பரந்தன் ரசாயன தொழிற்சாலையில் தற்காலிகஊழியர்களாக கடமையாற்றியவர்களில் 51பேர் அடுத்தமாதம் முதலாம் திகதி முதல் நிரந்தரமாக்கப்படவிருக்கின்றனர். வேலைநிறுத்தம் காரணமாக கடந்த 6நாட்களாக தடைப்பட்டிருக்கும், குளோறின் எரிசோடா உற்பத்திகளை அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கநிர்வாகத்தினர் முயற்சி எடுத்து வருவதாக தெரியவருகிறது.

கடந்த16-ம்திகதி ஆரம்பமான இலங்கை வர்த்தக சங்க ஊழியரின் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. இவர்களில் மூவர் நேற்று வேலைக்குத் திரும்பியதாக தெரியவருகிறது. இலங்கை வர்த்தக சங்கச் செயலாளர் திரு பாலதம்பு நாளை காலை பரந்தன் ரசாயன தொழிற்சாலைக்கு வந்து, வேலைநிறுத்தம் செய்யும் ஊழியர்களைச் சந்தித்து மேற்கொண்டு எடுக்கப்படவிருக்கும் நடவடிக்கை பற்றி ஆலோசிப்பார். வேலைநிறுத்தத்தை இலங்கை முழுவதும் விஸ்தரிப்பது பற்றியும் நாளை ஆலோசனை செய்யப்படுமென சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின், பரந்தன் ரசாயன தொழிலாளர் சங்க கிளைத்தலைவர் திரு. கே. இராமநாதனும், மற்றும் நால்வரும், இந்த வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டனர். ஆனுல் இச்சங்கத்தினர் தொடர்ந்து வேலை செய்துவருகின்றனர். இவர்கள் நிர்வாகத்திற்குகொடுத்துள்ள இரண்டுவார காலக்கெடு, அடுத்த மாதம் முதலாம் திகதியுடன் முடிவடைவதால் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிடில் இவர்களும், அடுத்த மாதம் முதலாம் திகதி வேலைநிறுத்தத்தில் குதிப்பார்கள் என சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அடுத்தமாதம் முதலாம் திகதி முதல் நிரந்தர நியமனம் பெற்றுள்ள ஊழியர்களில் அதிகமானேர் நேற்று இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தில் சேர்ந்து கொண்டனர். இதுவரை காலமும், தற்காலிக ஊழியர்களாக இருந்த இவர்கள் எந்த சங்கத்திலும் சரவில்லை

தமிழ்க்காங்கிரஸ் ஆதிக்கத்திலுள்ள பரந்தன் ரசாயன தொழிலாளர் சங்க உறுப்பினர்கள், வேலை நிறுத்தம் செய்துவருகின்றபோதிலும் சங்க தலைவர் இந்த வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளவில்லையென சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். இரு வாரங்கள் அவகாசம் தரும்படியும் அதற்குள் கைத்தொழில் மந்திரியைச் சந்தித்து, பிரச்னையைத் தீர்த்து வைப்பதாக, யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், சங்கப் பிரதிநிதிகளிடம் வாக்குறுதியளித்துள்ளார்.

பரந்தன் ரசாயன தொழிற்சாலை வாசலில், நாள் முழுவதும் ஆயுதம் தாங்கிய பொலிஸார் காவல் புரிந்து வருகின்றனர் வேலை நிறுத்தம் செய்துள்ள ஊழியர்கள் வெளியில் ஒரு கூடாரம் அமைத்து அதில் தங்கியுள்ளனர். நேற்று முன்தினம் தொழிற்சாலையில் வேலை செய்யும், 'டைப்பிஸ்ட்டை' வேலை நிறுத்தம் செய்துள்ள சில ஊழியர்கள் கேலி செய்ததாகவும், அவர்களைப் பொலிஸார் எச்சரித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

ரசாயன தொழிற்சாலை மின்சாரப்பகுதி மாலை 5 மணி முதல் இரவு 2 மணி வரையே வேலைசெய்வதால், கிளிநொச்சிப்பகுதியில், பகலில் மின்சாரம் இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகின்றனர். தொழிற்சாலையிலிருந்தே கிளிநொச்சிப்பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருவதே இதற்குக் காரணம். மின்சாரப் பகுதியில் கடமையாற்றும் 5 தற்காலிக ஊழியர்களும், நிரந்தரமாக்கப்பட்டிருப்பதாக, தற்காலிக ஊழியர் ஒருவர்தெரிவித்தார்.

தாங்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கும்போது 12 தொன் குளோறின்மட்டுமே இருந்ததாகவும், இதனுல் வாழைச்சேனை காகிததொழிற்சாலைக்கு, காகிதம் 'பிளிச்' பண்ணுவதற்கு 'குளோறின்' அனுப்பமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இலங்கை வர்த்தக சங்க ஊழியர் ஒருவர் தெரிவித்தார். 'குளோறின்' தட்டுப்பாட்டினுல், கொழும்பு மக்களுக்கு குடிநீர் வழங்க முடியாத நிலையும் ஏற்படுமென அந்த ஊழியர் அறிவித்தார்.

தற்பொழுது தொழிற்சாலையில் வேலை செய்யும் ஊழியர்கள் வீடுகளுக்குச் செல்வதற்கும், சாப்பாட்டிற்கு வெளியில் செல்வதற்கும் தொழிற்சாலை வானை பாவிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணம், ஞாயிறு

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில், நடந்துவரும் பெரியபுராண விரிவுரை தொடரில் இன்று நவாலியூர் வை. நல்லையாவினுல் சண்டேஸ்வர நாயனுர்' விரிவுரை, விசேஷ நிகழ்ச்சியாக நடைபெறவிருக்கிறது.

## ஆராய்ச்சிக்கு ஊக்கம்

பருத்தித்துறை, சனி

கடந்த இரு தினங்களாக தொண்டமானுறு, நாகர் கோவில், மருதங்கேணி ஆகிய இடங்களில் நடைபெற்ற நீரியல், உயிரியல், ஆராய்ச்சிகளை அவதானித்து, வழி நடத்தும் நோக்கமாக கொழும்பு விஞ்ஞான அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

பத்துக்கு மேற்பட்ட கல்லூரிகள் கலந்து கொண்ட இவ் ஆராய்ச்சிகள் பற்றி மேற்படி சங்கப்பிரதிநிதிகள் பாராட்டியதுடன், இது பற்றி தமதுஅடுத்த மாநாட்டில் ஒருதெளிவான விளக்கம் கொடுக்க விருப்பதாகவும் கூறினர்.

வடபகுதி விஞ்ஞான வித்தியாதிகாரி திரு. எம். அற்புதநாதன் ஆராய்ச்சிகளை மேற்பார்வை செய்தார்.

# விஞ்ஞானத்தில் முன்னேற

## தாய் மொழியில் கற்கவேண்டும்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

''கனிவளம் நிறையப்பெற்ற நிலவளம் கொண்ட நாடுகளில்தான் விஞ்ஞானம் வளரமுடியும் என்று கருதுவது மிகத்தவறு. அப்படிப் பல நாடுகள் இன்று விஞ்ஞான நாடுகளாகத் திகழ்ந்திருக்கவேண்டும்.''

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் ஏச்- எஸ்- ஸி- மாணவர் சங்கக்கூட்டத்தில் திரு- எம்- கே அந்தனிசில் பேசும்போது மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவஅ:-

கல்வி முறையையும், அக கல்வி ஊட்டப்படும்மொழியையும் பொறுத்துத்தான் விஞ்ஞான அறிவு வளர்ச்சி எவனுக்கும் ஏற்பட முடியும். அதாவது தாய்மொழி மூலம் போதனைதான் ஒவ்வொருவனுக்கும் விஞ்ஞான அறிவைச் சுலபமாகவும், ஆழமாகவும் புகுத்தவல்லதாய் இருக்கிறது.

இன்று விஞ்ஞானத்தில் சிறந்த நாடுகள் என்று கருதப்படும் நாடுகள் அனைத்தும் தத்தம் தாய்மொழியில் சிந்தித்தலாலேயே விஞ்ஞான முன்னேற்றத்தைக் கண்டன. அமெரிக்கா, ஜப்பான், ரஷ்யா, சீனு போன்ற நாடுகள் இதற்கு உதாரணம்.

தாய்மொழியில் சிந்தித்த நாடுகள் இன்று விண்வெளிப்பயணத்தை மேற்கொண்டிருக்கின்றன. நாம் அன்னிய மொழியில் சிந்திப்பதால் அப்படிச் சிந்திக்க வற்புறுத்தப்பட்டதால் மண்வெளியில் அதுவும் 'கட்டை வண்டியில்' போய்க்கொண்டிருக்கிறேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாவரும் வியக்கவே இந்திரன் பவனிவந்தான்

'ராவணவதம்' என்ற அந்தத் தனிப்பெருங் காரியதிற்கு இன்றியமையாத சீதா கல்யாணத்தை அடுத்தபடியாகக் குறிப்பிட்டபோதிலும் இதையும் குறிப்பாகவே-மூடுமந்திரமாகவே சொல்லுகிறான். இந்த வேள்வியிலிருந்து அந்த வேள்விக்குப் போகலாம் என்றுதான் சொல்லுகிறான். சித்தாச்சிரம வேள்வியிலிருந்து மிதிலையில் ஜனகன் நடத்தும் வேள்வி காணப்போகலாம் என்கிறான். கல்யாணம்என்ற மணவேள்வியை இப்போது ராமனுக்குத் தெரியவேண்டாமென்று மறைத்துவிடுகிறான்.

அந்த மிதிலையைத்தான் எவ்வளவு வசீகரமாக, ''விரியும் வார்புனல் மருதம் சூழ் மிதிலை'' என்று அந்த நீர்வள நிலவளங்களைச் சுருங்கச்சொல்லி வர்ணிக்கிறான் கவிஞன். ''அங்கே நடக்கும் யாகத்தையும் போய்ப்பார்ப்போம்'' என்று சொல்லிப் 'புறப்படு' என்று துரிதப்படுத்துகிறான். இந்த 'எழுக என்ற சிறுவார்த்தையிலேயே, அந்தக கல்யாண விஷயமாக விச்வாமித்திரனுக்கு உள்ள ஆத்திரத்தை எவ்வளவு நன்றாக மறைத்துக்காட்டுகிறான் கவிஞன். முனிவன் ராம லட்சுமணர்களை அழைத்துக்கொண்டு சோணை என்ற ஆற்றின் கரைக்கு வந்ததும் சூரியாஸ்தமனம் ஆகிவிட்டது. அன்

## கம்பர் கவி விருந்து

றிரவு மூவடும் அந்த ஆற்றங்கரையிலே தங்கினார்கள். ''இந்தச் சோலையில் ஏதாவது விசேஷம் உண்டா?'' என்று ராமன் கேட்டான். அதற்கு விஸ்வாமித்திரன் ''இங்கே காசியப மஹரிஷியின் மனைவியாகிய திதி என்பவள் தவம்செய்தாள். அவர்களுடைய புத்திரர்களான அசுரர்கள் அமிர்தம் உண்ட தேவர்களை ஜயிக்க முடியாமல் மாண்டுபோனார்கள். அந்தப் புத்திரசோகத்துக்குப் பின்புதான் இங்கே அந்த அம்மாள் தவம்செய்யத்தொடங்கினாள்'' என்ற பீடிகையுடன் அமிர்தம் கடைந்த கதையைச்சொல்லத்தொடங்கினான். ராம லட்சுமணர்கள் ஆவலாய்க் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ''யாவர்க்கும் தாயாகிய அழகுத்தெய்வம் வைகுண்டலோகத்தில் தன் பரிபூர்ண சௌந்தர்யத்துடன் மகாலட்சுமியாக வீற்றிருக்கிறாளல்லவா? ஒரு வித்யாதரப்பெண் ஒரு சமயம் யாழ்கொண்டு இசை பாடிப் புகழ்ந்ததும், அந்த அழகுத் தேவி உத்ஸாகமாய்த் தனது பூமாலை ஒன்றைக் கூந்தலிலிருந்து வெகுமானமாய்க் கொடுத்தாள். அந்த மாலையை அவள் தன்யாழினிலே கட்டிக்கொண்டு குதூகலமாய் அந்த விஷ்ணுலகத்திலிருந்து பிரமலோகத்திற்கு வந்தாள். வழியில் ஸாக்ஷாத் துர்வாச மஹரிஷியை - கோபத்திற்கும், சாபத்திற்கும் பேர்போன அந்த முனிவரையே சந்தித்துவிட்டாள்'' என்று முனிவர் சொன்னதும் ராமலட்சுமணர்களுக்குஅப்புறம் என்ன நடந்தது என்று தெரிந்துகொள்ள எவ்வளவு ஆவலாகஇருக்கும்! அந்தக் கொடியமுனிவர் அவளையும் கோபித்துக்கொள்ளப்போகிறாரோ? யாழும் கையுமாக அக்கன்னிகையைக் கண்டதும் ஆறாத கோபமும் ஆறிப்போய்விட்டது, துர்வாசருக்கு.

என்னை ஆளுடைய
நாயகிக்(கு)
இசைஎடுப்பவள்
என்(று)

அவள் அடிகளை வணங்கித் துதித்து நின்றார் முனிவர். அந்த முனிவர் அப்படி நின்றதும்அவளுக்குக் குதூகலம் அதிகரித்துவிட்டது.

உலகம் யானவயும்
படைத்(து)அளித்(து)
உண்(டு) உமிழ் ஒருவன்
இலகு மார்பகத்திருந்(து)
உயிர்
யாவையும் ஈன்ற
திலகவாள் நுதல் சென்
னியில்
சூடிய தெரியல்
அலகில் மாமுனி!
பெறுகென
அனிந்தனள் அனியால்

''சர்வேச்வரனுடைய மார்பிலேஇருந்து உயிர்களை எல்லாம் ஈன்றெடுத்த தாயாகிய அழகுத் தெய்வம் முடியிலே சூட்டியிருந்த மாலை இது'' என்று வித்யாதரப் பெண் சொல்லிக் கொடுத்ததும் துர்வாசருக்கும் உத்ஸாகம் பிறந்துவிட்டது பிரமாதமாக.

''தெய்வநாயகி
சென்னியிற்
சூடிய தெரியல்
ஐய! யான் பெறப்
புரிந்த(து) எத்
தவம்?'' என ஆடி
வெய்யமாமுனி,
சென்னியில்
சூடியே வினைபோய்
உய்யும்ஆ(று) இ(து)
என்று உவந்துவந்து
உம்பர் நா(டு)
அடைந்தான்.

இந்திரன் பவனிவருவதைக் கண்முன்னே காட்டுவதுபோல் விச்வாமித்திரன் வர்ணித்துக்கொண்டே போனான். தேவி, ரம்பை முதலான தெய்வப் பெண்கள் வீதி நெடுங்க ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் அந்தப்பவனியை அழகு செய்து வந்த அதிசயத்தையும் ஒரு சப்தசித்திரமாகக் காட்டினான் விச்வாமித்திரன்.

அரம்பை, மேனகை,
திலோத்தமை
உருப்பசி, அனங்கன்
சரம் பெய் தூணியின்
தளிரடி
நூபுரம் தழைப்ப
கரும்பையும் சுவை

இராமாயண இரசிகமாணி

**ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்**

(நல்லை ஆதீனம்)

இப்படி ஆடிக்கொண்டு போன துர்வாச மஹரிஷிக்கு எதிரே அந்த ஸ்வர்க்க லோகத்திலே தேவேந்திரன் பவனி வந்தான், ஐராவதத்தின்மேல்ஏறி. பவனியின் சிறப்பை ராமலட்சுமணர்கள் வியந்து கேட்கும்படி வர்ணிக்கிறான், விச்வாமித்திரன். மழை பெய்யப் போகும் மேகம் ஒன்று வெள்ளிமலைமேல் வருவது போல் அந்த வெள்ளை யானை மேல் வந்தானாம். அந்த இந்திரனுடைய கண்கள் ஆயிரம் ஆயிரம் தாமரை மலர்கள்போல் மலர்ந்திருந்தனவாம். தேககாந்தியும் கிரீடம் முதலிய ஆபரண காந்திகளும் சூரிய கிரணங்களைப் போல் ஒளி வீசினவாம்.

பெய்யுமாமுகில் வெள்
ளியம் பிறங்கல்மேல்,
பிறமும்
செய்யதாமரை ஆயிரம்
மலர்ந்து,செங்கதிரின்
மொய்ய சோதியை மிலைச்
சிய முறைமை
போன்(று) ஒளிரும்
மெய்யினே(டு) அயிராவ
தக் களிற்றின்மேல்
விளங்க.

கைப்பித்த
குதலையர், விளரி
நிரப்பு பாடலோ(டு)
ஆடினர்
வீதிகள் நெடுங்க

இப்படியெல்லாம் பவனி வரும் தேவேந்திரனுடைய ஆடம்பரவைபவங்களைக் கண்முன் கொண்டுவரும் போதே, எதிரே பைத்தியம் பிடித்தவர்போல் ஆடிக்கொண்டேவரும் துர்வாஸரையும் ராமலட்சுமணர்கள் மனக்கண்முன் தெளிவாய்ப் பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள். பவனியை வியந்து நோக்கிய அந்த முனிவர் இந்தப் படாடோபங்களைப் பார்த்து அப்படியே பிரமித்துப் போகிறாரா? யானைமேல் இருக்கும் தேவராஜா, எதிரே தெய்வப் பெண்களின் நடனத்தைப் பரிகசிப்பதுபோல் ஆடி ஆடி நடந்துவரும் முனிவரை மரியாதை செய்யப்போகிறானா? இனி என்ன நடக்கப்போகிறது என்றெல்லாம் ராம லட்சுமணர்களின் உள்ளம் எதிர்பார்த்து மேலே மேலே கதைகேட்பதில் முனைந்திருக்குமல்லவா? ''வீதி நெருங்க ஆடல்பாடல்களோடு வெள்ளை யானைமேல் நீலமேகம்போல் தேவேந்திரன் பவனிவருவதை வியந்து நோக்கிக்கொண்டே நெருங்கி வருகிறார்- துர்வாஸ முனிவர்'' என்று விச்வாமித்திரமுனிவன் தொடங்கினான் கதையை. இப்போது நீலமேகம் நீலமலைபோலத் தோன்றுகிறது. நீலமலையின் இருபுறமும் நிலாச்சுடர் தொகுதியாக விழுவது போல் வெண்சாமரங்கள் புரளுகின்றன. அப்படி வெண்ணிலாப் பொழியும் பூர்ண சந்திரனே காந்தியிலும் அழகிலும் ஒருங்கே பூர்ணமாகி ஒப்பற்ற வெள்ளிக்குடையாக அமைந்துவிட்டது என்று சொல்லும்படி விளங்குகிறதாம் சந்திரவட்டக்குடை.

நீலமால்வரை தவழ்தரு
கதிர்நிலாக் கற்றை
போலவே இரு புடையினும்
சாமரை புரளக்
கோல மாமதி குறைவற
நிறைந்து ஒளி குலாவ
மேல் இவர்ந்தென வெள்ளி
யந் தனிக்குடை விளங்க,
பவனி வந்து கொண்டிருந்த
இந்திரனுக்குப் பக்கத்திலேயே வந்துவிட்டார் துர்வாசர்.

(தொடரும்

# மதம்மாறவிருந்த உடன் மாணவர் நாவலர் அறிவுரைகேட்டு மனம் மாறினர்

சென்னையிலிருந்து நாவலர்பெருமானும் கலாநிதி பீற்றர் பார்சிவல்துரை மகனாரும் வெற்றியுடன் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர். துரைமகனாருக்கு, நாவலர் பெருமான்மீது முன்னையிலும்இப்போதுபதின்மடங்கு அன்பும், மதிப்பும் ஏற்பட்

## ஐந்தாங்குரவர் ஆறுமுகநாவலர்

டது. விபூதி பூசுகிறவர்களைக் கிறிஸ்தவராக்க ஆறாயிரம் கல் தொலைவிலிருந்து வந்த துரைமகனார், விபூதியுடன் உருத்திராக்கமும் அணிந்திருக்கிற நாவலர்பெருமானைக் கண்டவுடன் எழுந்து, குடும்பியோ நமவென்று வணங்கி அவர் ஆசனத்தில் அமர்ந்த பின் தாம் அமருகிற அளவுக்கு மாறியது இறைவன் திருவருளே.

நாவலர்பெருமான் சைவ சமயத்தைத் துறைபோகக் கற்றிருந்தார். வேதம்பொது சிவாகமங்கள் சிறப்பு. சிவாகமங்களின் சாரமே சைவ சித்தாந்தம். சிவாகமங்கள் கற்பதற்குவடமொழிதெரிய வேண்டும். நாவலர்பெருமான் காலத்திலும் அதற்கு முன்னும் பிராமணர் அல்லாதார் வடமொழி கற்க வசதியிருந்ததில்லை அது மற்றவர்கள் உதவியின்றிக் கற்கக்கூடிய மொழியுமில்லை. மாதவச் சிவஞான சுவாமிகளே தாம் வடமொழிகற்பதற்கு உதவியை நாடியிருந்தார். ஆனால் எங்கள் நாவலர்பெருமான் ஒருவருடைய உதவியும் கடுகளவுமின்றி தாமே கற்றுணர்ந்தார்.

இவர் அதிகாலையில் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் ஆறுமுகசாமிக்கு முன் நித்தியப்படி திருமுருகாற்றுப்படை ஓதி சடாட்சர மந்திரத்தைச் செபித்துவந்தார். சாயந்தரத்தில் செட்டியார் சிவன்கோவில் தெட்சணாமூர்த்தியின் முன்பு தேவார திருவாசகங்களுடன் ஐந்தெழுத்தோதி வந்தார். இவருக்கு முருகனும் தட்சணாமூர்த்தியும்உபாசனா மூர்த்திகளாயும், குருவாயுமிருந்திருக்கவேண்டும். நாவலர்பெருமான் அபாரஞாபக சக்தியும், அளவுகடந்த ஆற்றலும் அறிவும்மிக்கவர். அவதார புருஷரல்லவா? அவர் வேதம், சிவாகமம், உபநிடதங்கள், புராண இதிகாசங்கள், சித்தாந்த சாத்திரம் பதினான்கு, தேவார திருவாசகங்கள், தொல்காப்பியம், திருக்குறள், திருக்கோவையார் யாவும் கற்றறிந்தார்.

ஆறாயிரம் கல் தொலைவிலிருந்து கிறிஸ்தவ மதத்தைப்பரப்ப இங்கு வந்தவர்களுக்குச்சைவம் தெரியாது. இங்கிருந்தவர்களுக்கும் சைவம் தெரியாது. அத்துடன் தாங்கமுடியாத வறுமை. வறுமையிலும் பார்க்க, அறியாமைதான் அதிகமாக இருந்தது. சைவ சித்தாந்தசமயத்தையறிந்து அதன்படி ஒழுகுபவனிடம் 'இந்தஉலகம் முழுவதையும் தருகிறேன்; நீ உனதுசைவத்தைக்கைவிட்டு கிறிஸ்தவ மதத்திற்கு மாறுகிறாயா?' என்று கேட்டால் அவன் தனது மதத்தின்றும் பிறழ்வானா? ஒருக்காலும்அப்படிச் செய்யமாட்டான். இதை எங்கள் நாவலர்பெருமான் கண்டார்.

பாதிரிமார் கல்விச் சாலைகள் அமைத்தார்கள். பள்ளிக்கூடங்களுக்குப் பக்கத்திலே கோவில்களைக் கட்டினார்கள். சைவவித்தியாசாலைகள் அமைத்தார்கள். அச்சியந்திரசாலை அமைத்து கிறிஸ்துமதப் புத்தகங்களை அழகான முறையில் அச்சிட்டு இலவசமாக

**அறநெறிக் காவலர்**

**முதலியார் செ. முத்துத்தம்பி**

வழங்கினார்கள். துண்டுப்பிரசுரங்கள்வெளியிட்டார்கள். புதினப்பத்திரிகைவெளியிட்டார்கள். கிராமங்கள்தோறும் கிறிஸ்துமதப்பிரசங்கங்கள்செய்வித்தார்கள். சைவத்தைக்குருட்டுமதமென்று கண்டித்தார்கள். கிறிஸ்து மதத்தை உயர்வாகப் பேசினார்கள். சைவர்கள் கிறிஸ்தவராக மாறுவதைக்கண்டு நாவலர்பெருமான் உளம் துடித்தார். எங்கள் பெருமான் பதின்மூன்றுவயதாக இருக்கும்பொழுதே சைவமும் தமிழும் குன்றிவருவதைக்கண்டு, விம்மிவிம்மியழுது, சிவபிரானை நோக்கி ஒரு வெண்பா பாடியதாகச் சொல்வார்கள். பெருமான் சைவத்துக்காகவும், தமிழுக்காகவும் மத்திய கல்லூரியிலும் வெளியிலும் தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணம்செய்து, தொண்டாற்றத் தொடங்கினார்.

மூ. தில்லைநாதபிள்ளையென்பவர் மத்திய கல்லூரியில் பெருமானுடன் ஆங்கிலம் கற்று பின்னர் அந்தக் கல்லூரியிலேயே ஆசிரியனாக இருந்தவர். சு. சின்னப்பாபிள்ளையென்பவரும் அப்படியே. இருவரும்குறிப்பிட்ட ஒரு நாளில் ஞானஸ்நானம் பெறுவதாக, பீற்றர் பார்சிவல் துரைமகனாருக்கு வாக்களித்திருந்தனர். பெருமான் இதை அறிந்திருந்தார். நமக்கென்னவென்றுவாளாவிருப்பாரா அவர்? அவர்களிடம் சென்று, ''அன்பான தம்பிமாரே, என்ன புத்தியீனமாக இப்படி முடிவு செய்தீர்கள்'' என்று சொன்னார். ''புண்ணிய வசத்தினால் சற்சமயத்தில் பிறந்த நீங்கள் அதன் அருமை பெருமை தெரியாததனால் அதை விடுத்து வேற்று மதத்தைத் தழுவ உடன்பட்டிருக்கிறீர்கள்'' எனச் சொல்லி சைவத்தின் பெருமையினை அவர்களுக்கு விளக்கினார். சிவபெருமானே முழுமுதற் கடவுளென்றும் பசு பதி பாச இலக்கணம் சைவத்தில் சொல்லியுள்ளதுபோல் வேறெந்த மதத்திலும் சொல்லப்படவில்லையென்றும், பேரறிவானகடவுளும் சிற்றறிவான ஆன்மாவும் அநாதியானவையென்றும், எல்லா ஆன்மாக்களுக்கும் முத்தியின்பம் உண்டு என்றும், நித்திய நரகம் கிடையாதென்றும், மறுபிறப்பும் பாவபுண்ணியமுமுண்டென்றும் இன்னும் சைவத்தின் தத்துவங்களை பெருமான் அவர்களுக்கு விளக்கினார். இருவரும் கண்விழித்தார்கள். 'என்ன பாவம், என்ன பாதகம் எங்கள் அறிவீனத்தினால் செய்யப்பார்த்தோம். சுவ பெருமானே தங்களைக் கொண்டு, எங்களை மதமாற்றத்தினின்றும் தடுத்து ஆட்கொண்டார். தங்களுக்கு கோடி வணக்கம்' என்று பெருமானின் காலடியில் விழுந்து வணங்கி, உய்தோம் உய்தோமெனச் சொல்லினர்.

(தொடரும்)

## வாழ்க்கையில் நிம்மதி

தில் அவசரப்பட்டு ஏதாவது செய்துவிட்டு பின்னால் ஆத்திரம் தணிந்ததும் ''ஆ... இப்படிச் செய்துவிட்டோமே'' என்று மனம் வருந்துகிறோமே. அதுதான் உண்மையான மனச்சாட்சி

# தீண்டாமை: இந்துமதத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுக்கொண்டிருந்தார் எல்லாம் ... சினமெடுத்த

தைப்பரப்ப இங்கு வந்தவர்களுக்குச்சைவம் தெரியாது. இங்கிருந்தவர்களுக்கும் சைவம் தெரியாது. அத்துடன் தாங்கமுடியாத

மூ. தில்லைநாதபிள்ளையென்பவர் மத்திய கல்லூரியில் பெருமானுடன் ஆங்கிலம் கற்று பின்னர் அந்தக் கல்லூரியிலேயே ஆசிரியனுக

விழுந்து வணங்கி, உய்தோம் உய்தோமெனச் சொல்லினர்.

(தொடரும்)

---

வாழ்க்கையில் நிம்மதி

# மனச்சாட்சியின் கட்டளையே கடவுளின் கட்டளை

## நல்லவராவதும் தீயவராவதும் நம்மில்தான் தங்கியுள்ளது

6

ஒரு பொய்யைமறைத்துப் பேசும்போது எங்கே ஏதாவது தாறுமாருக உளறிக் கொட்டிவிடுவோமோ எங்கே நம் குட்டு வெளிப்பட்டுவிடுமோ என்று வேறு மனம் அங்கலாய்த்துக் கொண்டே இருக்கும். வாழ்க்கையின் நிம்மதி குலைவதற்கு இவ்வளவும் போதாதா?

உண்மையை உரைத்துவிட்டால் இந்தச் சங்கடங்கள் எதுவுமேயில்லை. உண்மையைச் சொன்னேம் என்ற மனத் திருப்தியும் இருக்கும். உண்மையைப் பேசியதால் ஏதும் கஷ்டங்கள் ஏற்படுவதாயிருந்தாலும் அவற்றை முகமலர்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளக் கூடிய தெம்பும் இருக்கும்.

சாதாரணமாக ஒரு மனிதன் பேசும் பொய்களை ஆராய்ந்து பார்த்தால் அவை மிகமிக அற்ப காரணங்களுக்காகவே பேசப்பட்டதாக இருக்கும். நாம் ஒரு நாளில் பேசிய விஷயங்களுள் என்ன என்ன பொய் பேசினேம். எதற்காகப் பொய்பேசினேம் என்று ஒவ்வொரு நாளும் படுக்கையில் நித்திரையாவதற்கு முன்னர் நிதானமாகச் சிந்தித்துப் பார்த்தால் அப்பொய்களைத் தவிர்த்து வாழும் முறைகளை யோசித்துக் கண்டுபிடிக்கலாம்.

ஒரு விஷயத்தில் பொய் கூறி, பின்னுல் அது கண்டுபிடிக்கப்பட்டு அதனுல் ஏற்படும் அவமானம், அந்த இடத்தில் உண்மையைக் கூறினுல் ஏற்படும் அவமானத்தைவிடப் பெரியதாயிருக்குமல்லவா?

எப்படியான சந்தர்ப்பங்களில் மனிதன் அதிகமாகப் பொய் சொல்லுகிறுன்?

**— திருமதி பார்வதி நாகலிங்கம் —**

அநேகமாக வீண் ஜம்பத்துக்காக அல்லது ஒரு சங்கடமான நிலையைத் தவிர்ப்பதற்காக அல்லது தான் செய்த ஒரு இழிவான செயலை மறைப்பதற்காக. இன்னும் இதுபோன்ற சில்லறை விஷயங்களுக்காகத்தான். என்ன கேவலம். பஞ்சமா பாதகங்களில் ஒன்றுன பொய்யை எவ்வளவு அற்பமான காரணங்களுக்கெல்லாம் பயன்படுத்துகிறேம்.

ஒரு பெண் சவுரி வைத்துக் கூந்தலைப் பின்னிக்கொண்டு போகிறுள். சிநேகிதி ஒருத்தி "ஆகா, உனக்கு எவ்வளவு நீளமான கூந்தல்!" என்கிறுள். சவுரிப்பெண் என்ன சொல்கிறுள் "எங்கள் வீட்டில் எல்லோருக்குமே இப்படி நீளமான கூந்தல் இயற்கையாகவே அமைந்துவிட்டது" என்கிறுள். வாய் கூசாமல் இப்படியொரு பொய்யைச் சொல்லவேண்டிய அவசியமென்ன? ஏன் அவள் அப்படிக் கூறினுள்? வீண் ஜம்பம். எல்லாம் வீண் ஜம்பத்துக்காகத்தான்.

இந்த மகிழ்ச்சி தேவைதானு? இதைவிட்டு இல்லையடி, இது வெறும் சவுரி'' என்று சொன்னுல் என்ன குடிமுழுகிவிடும். பெண்கள் எல்லோருமே சவுரி வைத்துத்தானே கூந்தல் முடிகிறுர்கள். இதில் என்ன அவமானம் வந்துவிடப் போகிறது. அற்ப விஷயம்.

அற்ப விஷயங்களுக்காகப் பொய் சொல்வதை நாம் விட்டுவிடவேண்டும். மனத்தை உண்மை வழியில் திருப்புவதற்கு அது ஒரு நல்ல பயிற்சியாகும்-

இன்றைய சமுதாயத்தில் பொய்யையே மூலதனமாக வைத்து வாழ்க்கை நடத்துபவர்கள் ஏராளமாக உண்டு. அரசியலில், வர்த்தகத்தில், கலைஉலகில், இலக்கிய உலகில், பத்திரிகை உலகில் பொய்யே மிகப் பெரிய மூலதனம். வெளியில் பார்த்தால் ஆப்பமுக்குச் சொல்லமுடியாத பிரமுகர்களாகக் காட்சியளிப்பார்கள். தர்மசீலராக, குணக்குன்றுகளாக அவர்கள் பெயர்கள் பத்திரிகைகளில் அடிபடும். ஆனுல் உள்ளுக்கு எத்தனையோ தில்லுமுல்லுகள், மோசடிகள், ஊழல்கள் நிறைந்திருக்கும். அவர்கள் வாழ்வது வாழ்க்கையல்ல. நாடகம். போலி. மனத்திருப்தி இல்லாத வாழ்வும் ஒரு வாழ்வா? கஞ்சியைக் குடித்துக் கொண்டேனும் மனத்தைத்திருப்திப்படுத்தி வாழ்வதே மேலான வாழ்க்கை.

**உள்ளக்கமலம்**

மனச்சாட்சியே கடவுள் என்று கூறினேம். எனவே மனச்சாட்சியின் கட்டளையைக் கடவுளின் கட்டளை என்று கொள்ளலாம். ஆனுல் சில வேளைகளில் மன விகாரத்தின் குரலும் மனச்சாட்சியின் குரல்போல் ஒரு மாயத் தோற்றத்தைக் கொடுப்பதுண்டு. இந்த மாயத்தில் நாம் மயக்கம் அடைந்துவிடக்கூடாது.

நாம் உண்மைக்கு உண்மையாக நடந்துகொண்டிருக்கிறேம் என்று நமது மனச்சாட்சி கூறுகிறது. ஏதோ விதிவசத்தால் ஒருவர் நம்மைப்பற்றி அபாண்டமாகப் பழியைச் சுமத்திவிடுகிறுர் என்று வைத்துக் கொள்வோம். அப்போது நம் மன நிலை எப்படியிருக்கும்? அப்படிப் பழி சுமத்தியவரை அப்படியே அறைந்து கொன்றுவிடலாமா என்று தோன்றும் இதயம் எரிமலையாகக் கொதிக்கும். பழிக்குப் பழியாக ஏதாவது செய்தே ஆகவேண்டும் என்று மனம் துடிக்கும்.

அதை மனச்சாட்சியின் குரல் என்று கொள்ளலாமா? கடவுள் அப்படிக் கட்டளை இடுவாரா? இல்லவே இல்லை. அந்த இடத்தில் மனிதனுக்கே இயற்கையாக அமைந்துள்ள பலவீனம் குறுக்கிடுகிறது. அதனுலேயே இறைவனுக்கு ஒப்புதலில்லாத ஒரு எண்ணம் இதயக்குரலாக வெளிப்படுகிறது. இதன் உண்மையைத் தெரிந்து கொள்ளவேண்டுமானுல், மனத்தின் ஆத்திரம் தணிந்ததும் நம் மனதில் தோன்றும் எண்ணங்களை, கழிவிரக்கப்படும். அந்த வேளையில் எழும் மனச்சாட்சியின் குரலை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளலாம். ஆத்திரத்தில் அவசரப்பட்டு ஏதாவது செய்துவிட்டு பின்னுல் ஆத்திரம் தணிந்ததும் "அடாடா இப்படிச் செய்துவிட்டோமே" என்று மனம் வருந்துகிறேமே. அதுதான் உண்மையான மனச்சாட்சியின் குரல்.

ஆத்திரம் கண்ணை மறைக்கும் சந்தர்ப்பங்களில், சிறிது அவகாசம் கொடுத்து அமைதியாகச் சிந்தித்துப் பார்த்தால் மனச்சாட்சியின் உண்மையான குரல் ஒலிப்பதைக் கேட்கலாம். அப்படி ஆத்திரத்தைத் தணித்துக்கொள்வது மிகவும் சிரமமான காரியமே. ஏனெனில் நாம் எவ்வளவு உயர்ந்த பிறவியாக இருந்தாலும் நாம் வெறும் மனிதர்கள்தான். தெய்வம் அல்லவே. அதனுல் நம் மனத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளப் பழகவேண்டியது அவசியமாகிறது. மனச்சாட்சிக்கும் மனவிகாரத்திற்கும் வேற்றுமை தெரியாமல் மயக்கம் அடையாமல் இருப்பதற்கு இந்தப் பயிற்சி மிகவும் அவசியம்.

மனதின் விபரீதப் போக்கே மனிதனை ஆசாபாசங்களில் உழலவைத்து மனிதனை ஆட்டிப்படைக்கின்றது. குதிரைக்குக் கடிவாளம் இட்டு அடக்குவது போல் மனத்துக்கும் கடிவாளம் இட்டு அடக்குவது அவசியம். அத்துடன் அமையாது அதை நல்வழியில் இட்டுச் செல்லவும், நல்ல பண்புகளைத் தீனியாகக் கொடுத்து நற்சிந்தனைகளை மனதில் வளர்க்கவேண்டியதும் அவசியம்.

எப்படி நல்ல சூழலில் வளரும் குழந்தை, நல்ல பெற்றேரின் பராமரிப்பில் வளரும் குழந்தை பிற்காலத்தில் நல்ல மனிதனுக வளருகிறதோ அப்படியே மனமும் நல்லவர்களுடன் பழகுவதில், நற்சிந்தனைகளை அசைபோடுவதில் நல்மனதாக வளர்கிறது.

எப்படி ஒரு பயிர் நல்ல பசளையுள்ள இடத்தில் நன்கு செழித்து வளர்கிறதோ அப்படியே மனமும் நல்ல சூழலில் நல்லோர் இணக்கத்தில் நல் அறிவுரைகளில் நல்ல மனமாக வளர்கிறது. தூய உள்ளமாகப் பக்குவப்படுகிறது.

நற்சிந்தனைகளையும், நல்லெண்ணங்களையும் கொள்முதல் செய்வதற்கு நல்ல இடம் சமயநூல்கள். சமய நூல்களிலே கூறப்படும் ஆழ்ந்த அறிவுரைகளை உணர்ந்து படிக்கும்போது மனிதனை நல்லவனுகவளர்க்கவும், மனித சமுதாயத்திலே ஒழுக்கத்தையும் நெறியையும் வளர்க்கவுமே சமயங்கள் தோன்றினவோ என எண்ணத் தோன்றுகிறது.

**அருள் சுரந்து வாராய்**

**—பசுவூர் சு. மகாலிங்கசிவம்—**

ஈழமதன் எண்டிசையு மிருந்து வந்த
எண்ணற்ற பத்தர்குழா மிரங்கி யேத்தச்
சூழவெங்கும் நாதசுர கானம் சிந்தச்
சுகந்தவெழிற் பூக்களெல்லாம் பொலிந்து நாற
வேழமுகன் ஆறுமுகன் முன்னே செல்ல
விண்ணூர்ந்த பொற்கவிதைத் தேர மர்ந்து
ஆழ்கடல்சூழ் நயினைதனில் வாழும் செல்வி
அம்பிகையே அருள்சுரந்து வாராய் அம்மா!

எதிர்வரும் 28-ந் திகதி நயினை நாகபூஷணியம்மாள் தேர் உற்சவமாகும்.

---

# தீண்டாமை: இந்துமதத்தின் மிகப்பெரிய களங்கம்

ஹிந்து மதத்தின் மிகப்பெரிய களங்கமென்று தீண்டாமையை நான் கருதுகிறேன். தென் ஆபிரிக்கப் போராட்டத்தின்போது எனக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களின் வாயிலாக இவ்வுண்மையை நான் உணர்ந்தேன். ஆன்மிகத்துறையில் நான் ஒரு காலத்தில் சம்சயவாதியாக இருந்தேனென்பது இதற்குக் காரணம் அல்ல. கிறிஸ்தவ நூல்களைப் படித்தன் விளைவாக எனக்கு இந்த அபிப்பிராயம் ஏற்பட்டிருப்பதாகச் சிலர் கூறுவதும் தவறு. பைபிளுடன் அல்லது பைபிளைப் பின்பற்றுவோருடன் எனக்குப் பரிச்சயமோ கவர்ச்சியோ ஏற்படுவதற்கு வெகு காலத்திற்கு முன்பிருந்தே இவ்வபிப்பிராயங்களை நான் கொண்டிருக்கிறேன்.

இந்தக்கருத்து உதயமானபோது எனக்குப் பன்னிரண்டு வயதுகூடப் பூர்த்தியாகவில்லை. அக்காலத்தில் உக்கா என்ற தோட்டி எங்கள் வீட்டுக் கக்கூசைச் சுத்தம் செய்வதற்காக வருவதுண்டு. அவனை ஏன் தொடக்கூடாதென்று என் தாயாரிடம் அடிக்கடி கேட்பேன். எதேச்சையாக உக்காவை நான் தொட நேர்ந்தால் குளித்துப் பரிகாரம் செய்யும்படி என்னிடம் சொல்வார்கள். நான் இயல்பாகவே கீழ்ப்படிந்து அவ்வாறு செய்வேன். ஆனுல் தீண்டாமையை மதம் அனுமதிக்கவில்லையென்றும், அனுமதிப்பது சாத்தியமில்லையென்றும் புன்சிரிப்புடன் சொல்லி விட்டுத்தான் குளிப்பேன். மிகுந்த கடமையுணர்வும் பணிவும் வாய்ந்த குழந்தையாக நான் இருந்தேன். என் பெற்றேர்களிடமிருந்த மரியாதைக்கு முரணில்லாத விதத்தில் அவர்களுடன் இவ்விஷயம் பற்றிப் பலமுறை சம்வாதம் செய்ததுண்டு. உக்காவைத் தொட்டால் பாபம் என்று என் தாயார் கருதியது முற்றிலும் தவறு என்று கூறினேன்.

பள்ளியில் படிக்கும்போது 'தீண்டாதவர்களை' நான் அடிக்கடி தீண்டுவதுண்டு. இதை என் பெற்றேர்களிடமிருந்து ஒளிக்கவும் மாட்டேன். அந்தத் தீட்டுக்குக் குறுக்குவழிப் பரிகாரமாக, வழியில் செல்லும் முஸல்மான் எவரையாவது நான் தொடவேண்டுமென்று என் தாயார் கூறுவார். அன்னையிடமிருந்த பக்தி மரியாதை காரணமாக நான் அவ்வாறே செய்வேன். ஆனுல் இதை மதக் கடமை என்று நான் நம்பியதே இல்லை.

எங்கள் குடும்பத்தில் இராமாயண பாராயணம் வழக்கமாக நடந்து வந்தது. தீண்டாதவன் என்று இன்று கருதப்படும் ஒருவன் தன் படகில் இராமரை ஏற்றிக்கொண்டு கங்கையைக் கடப்பதற்கு அனுமதித்த இராமாயணம் எந்த மனிதர்களையும் பாப ஆன்மாக்களைக் கொண்டவர்கள் என்று கருதி தீண்டாதவர்களை ஒதுக்குவதை அனுமதித்திருக்க முடியுமா? என்று நான் யோசிப்பேன். 'பாபிகளைப் பரிசுத்தப்படுத்துபவர்' என்பது போன்ற அடைமொழிகளுடன் ஆண்டவனை நாம் வணங்குவதால், ஹிந்துமதத்தில் பிறந்த எவரையும் பாபி அல்லது தீண்டாதவர் என்று கருதுவது பாவம், சைத்தானின் மனப்பான்மை என்பது புலனுகும் இது மகா பாவம் என்பதை நான் அலுப்புச் சலிப்பின்றி திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறேன். பன்னிரண்டாவது வயதிலேயே இதை நான் ஒரு கோட்பாடாகக் கொண்டிருந்தேன் என்று சொல்லிக் கொள்ளவில்லை. ஆனுல் தீண்டாமை ஒரு பாபம் என்று அப்போதே கருதினேன்என்பது உண்மை வைஷ்ணவர்களுக்கும் வைதீக ஹிந்துக்களுக்கும் கொடுக்கும் தகவலாக இந்தக் கதையைச் சொல்கிறேன்.

[யங் இந்தியா-1921, ஏப்ரல்-27]

---

'அறிவிலாத எனைப் புகுந்து,
ஆண்டுகொண்டு
அறிவதை அருளிமேல்
நெறியெலாம் புலம் ஆக்கிய
எந்தையைப் பந்தனை
அறுப்பானை
பிறிவிலாத இன்னருள்கள்
பெற்று
இருந்துமாறுடுதி
பிண நெஞ்சே
சிறியெலாம் மிகக்
கீழ்ப்படுத்திக்
தாய் கெடுத்தாய்
என்னைக் கெடுமாறே''
(திருவாசகம்)

திருவாசகத்துக்குஉடுகார் ஒரு வாசகத்துக்கும்உருகார் என்பது முதுமொழி. இவ்வாறே சமய நூலகளில் மனத்தை உருக்கவும் அதை பக்குவப்படுத்தவும் எண்ணற்ற அறிவுரைகள் நிரவிக்கிடக்கின்றன. எல்லா சமய நூல்களிலும் மனிதனை நல்வழிப்படுத்தக் கூடிய அறிவுரைகளே காணப்படும். எனவே மனிதனை நல்வழிப்படுத்தவேசமயங்கள்தோன்றின. என்பது இதனுல் உறுதியாகின்றது.

சமய அறிவுரை பகரும் நூல்களில் மனிதனை இழித்துக் கூறப்படும் வாக்கியங்கள் வாழ்வின் அநித்தியத்தை மனிதன் உணர்ந்து உடலைப் போஷிப்பதை விட்டு உள்ளத்தைப்போஷிக்கவேண்டும், என்ற உண்மையை உணர்த்துவதற்காகவே கூறப்பட்டிருக்கிறதல்லாமல் மனிதப்பிறவியை இழிவுபடுத்துவதற்கல்ல என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

சமயநூல்கள் தவிர சாதாரணமாக நமக்குக் கிடைக்கும் ஏனைய நூல்களிலும் நல்ல நூல்களை மட்டுமே நாம் படிப்பதற்குத் தெரிவு செய்யவேண்டும். கண்ட குப்பைகளையெல்லாம் வாசிப்பதைத்தவிர்க்க வேண்டும்.

இன்று நமக்குக் கிடைக்கும் நூல்களில் எத்தனை நூல்கள் நமது மனதைப் பக்குவப்படுத்துவதற்கு ஏற்றவையாக இருக்கின்றன. அன்றுடம் நாம் வாசிக்கும் பத்திரிகைகள் சஞ்சிகைகள் முதலியவற்றில் எத்தனை நமது உள்ளத்தைப் புனிதப்படுத்தக்கூடிய விஷயங்களைத் தருகின்றன.

அழகிய மூவர்ண அட்டைகளைத் தாங்கிவரும் நூல்கள் சஞ்சிகைகள் முதலியவற்றில் பல பொழுது போக்கு என்ற போர்வையில் கீழ்த்தர எண்ணங்களையும் சிந்

5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# ஒரு பசுவின் கதை

அவளுக்கு அங்கே வாழ்ந்து அலுத்தேபோய் விட்டது. அதனால் புதிய இடந்தேடி பாதையோரமாக நடந்துபோய்க்கொண்டிருக்கிறாள். எங்கே போவதென்று அவளுக்கே தெரியாமல் இலட்சியமற்றபோக்காய் நடந்துபோகிறாள். எங்கேயாவது போய்த்தானே ஆகவேண்டும்; அது மட்டும் புரிந்தது அவளுக்கு.

அதோ, வலப்பக்கமாகப் பாதை திசைதிரும்புகிறது, அவளது நடையில் சிறிதே தாமதம். பாதையை நின்று நிதானித்து நோக்குகிறாளா? பாதையின் இரு ஓரங்களிலும் 'பசுமை' கூத்தாடுகிறது. அவளது சொரணை பிடித்த நாக்கிலே 'நீர்' ஊறி அவளை நிலைதடுமாற வைக்க அவள் பாதையை மறந்து பசுமை நாட்டிய 'புல்நுனிகளை' சுவைக்கத் தொடங்குகிறாள். நீண்ட காலச்சிறை வாழ்க்கையிலே அவள் கண்டதெல்லாம் வெறும்'சுணை' பிடித்த வைக்கோல்தான்.

இன்று அவளுக்கு நல்ல தீனி. காய்ந்துகிடந்த 'இரைப்பை' காற்று வாங்கிய 'பலூன்' மாதிரி உப்பி விரியும் வரைக்கும் நல்ல மேய்ச்சல்... கழுத்து மணி அசைந்தாட அவள் மேய்வதே ஒரு தனியழகு. மேய்ச்சல் முடிந்தது; இனி அவளது தொண்டையை நனைக்க 'நீர் வேண்டும். பாதையில் வந்துநின்றுகொண்டு நான்கு பக்கமும் கண்களைப் பதியவிடுகிறாள். நீண்டு வளர்ந்து வானத்தைத் தொடுமளவு உயர்ந்துகிடக்கும் பனங்கூட்டம். பாளையும், நுங்குமாக பனை மரங்கள் பொலிய நின்றன. பனங்கூட்டத்தின் இடையே ஓர் ஒற்றைவழிப் பாதை தெரிந்தது. பாதை வழியே தண்ணீர் குடமேந்தியகன்னிப்பெண்கள் குடங்களை லாவகமாகஇடைகளில் ஏந்தியவாறு நடந்து வருவதை அவளது கண்கள் கண்டுவிடுகின்றன.

ஆம்! தூரத்தில் ஆறோ, குளமோ, வாய்க்காலோ, ஊற்றுநிலையோ ஏதாவது

சிறுமைக்காக மனம் மிக நோகுபவள் ஐந்தறிவுபெற்ற பாவத்துக்காக என்றுமே மிருகமாகத்தானா வாழவேண்டும்? பலநாள் மிருகமனத்தோடு போராட்டம் நடத்தியிருக்கிறாள். என்றாலும் இதுவரை வெற்றிமிருகத்துக்கே. ஆனால் போராட்டத்தியாயகத்தை அவள் என்றுமே தளரவிடவில்லை கடைசிவரை ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று துடித்தது அவளது மிருகமனம்.

நுரைக்கநடந்து சென்றவள் தன் எதிரே நீண்டு விரிந்துகிடக்கும் அந்தக் குளத்தைக் கண்டதும் காதளவு விரிந்துகிடக்கும் கண்களைச் சிமிட்டி, கழுத்துமணி ''கிண்கிணி'' நாதம்போட துள்ளிக்குதித்து ஆனந்தக் கூத்தாடுகிறாள். குளம் நிறையத் தாமரையும்அல்லியும் இடையிடையே குமிட்டியும் பசைக் கம்பளமாக விரிந்துகிடக்கின்றன. பூக்கள் இலைகளையும் கிழித்துக்கொண்டு நீண்ட தண்டுகளிலே அழகு கொஞ்சும் 'மோகினிக் குமரிகளாய்த்' தவம்செய்தன. அந்தஇயற்கையின் தனி அழகு அவளுக்குச் சொர்க்கத்தையே நினைவூட்டியது.

குளக்கரையை நோக்கி மெல்ல நடக்கிறாள். அங்கே சென்றவள் தண்ணீருக்குள் கால்வைக்காமல் தள்ளி நின்று, தன் நீண்ட நாக்கைக் குளத்துக்குள் விட்டு, தன் 'மகர விடாய்க்கு' முற்றுப்புள்ளி வைக்கத் தன்னை மறந்து நீர் அருந்தி நின்றவளுக்கு தன் 'சொரசொரத்த'மேனியைத் தீண்டிப் புல்லரிப்பு உண்டு படுத்தும் ஒரு புது

அவளது ஏக்கத்தொனி அவனை இந்த உலகத்துக்குக் கொண்டுவருகிறது. அவன் தனது நீண்ட அழகியகொம்புகளால், அவளது பருவ நெஞ்சைத் திருவி அவளுக்கு வெறியை ஊட்டிக் கொண்டே; ''கண்ணே! நானும் உன்னைப்போல் அனாதைதான். தாய், தந்தையரை இழந்து ஒரு

போன்ற வெள்ளை நிறத்தில் ஆங்காங்கே 'தவிட்டு நிறப் புள்ளிகள்'. அவைஎவ்வளவு அழகை ஊட்டுகின்றன. அவளது மேனிக்கு அவளது அழகுமேனியிலே ஒரு தனி மோகம் வைத்திருந்தான் அவளை வளர்த்த அந்த வீட்டுக்காரக்கிழவன். அதன் வெறியால் தன் தள்ளாமையையும் கவனியாமல் ஒவ்வொருநாளும் இவளைக் குளிப்பாட்டிக் கழுவித் தூய்மையாக்குவான். இதனால் அவளது அழகு துலங்கிக் கொண்டே வந்தது

இன்று அப்படியான தன் அழகைத் தன் இனத்தைச் சேர்ந்த ஒருவன் தன்னை மறந்து ரசிப்பதைப்பார்த்து அவளது 'பெண்மை' பூரிப்புற்றது. அந்தக்காளை அவளது அழகை அங்கம் அங்கமாக ரசித்தான். ருசிப்பதைப் பார்க்கிலும் ரசிப்பது தான் தனி அழகு என்று அந்தக்காளை அறிந்திருப்பானோ? அப்படித் தானிருக்கவேண்டும் அவனது ரசிப்பு; கவிஞனின் 'தாகம்' போல் நீண்டு கொண்டே போயிற்று.

அந்த நீண்ட பொழுதைக் கலைப்பதைப்போல் அவள் தான் வாய் திறக்கிறாள்; ''அன்பரே! நான் ஒரு அனாதை. என்னைப் பிடித்திருக்கிறதா உங்களுக்கு?''

ஆசைகளுக்கு மிக எளிதில் அடிமையாகும் மனப்போக்குப் பெற்றவர்கள். நான் இருந்த வீட்டில் ஓர் அழகிய இளம்பெண் இருந்தாள். அவளை என்ன பவித்திரமாக அந்த வீட்டார் வளர்த்து வந்தார்கள் தெரியுமா? அவள் ஒருநாள் செத்துப் போய்விட்டாள்; ஏன் தெரியுமா? அவளைக் காதலிப்பதாக ஒருவன் பாசாங்கு செய்து, அவளைக் கர்ப்பவதியாக ஆக்கிவிட்டுஎங்கேயோ ஓடிவிட்டானாம். அந்த அவமானம் தாங்கமுடியாமல் நஞ்சைக்குடித்துச் செத்துப் போய்விட்டாள்.'' என்று கூற, இதுதான் மிருக நிலை. நாமும் இதைத்தான்செய்ய வேண்டுமா, கண்ணே! நாம் ஒரு புதுவழி காண வேண்டும் ஆம்! தெய்வீகக்காதல் பெற்று, மிருகநிலையை மறந்து உண்மையான மனித நிலைக்குத் தாவவேண்டும். நான் அதற்குத்துணிந்துவிட்டேன். உனக்குச் சம்மதமா?'' என்று மிருகமான அந்தக்காளை மனித தத்துவத்தைப் புரிந்துவிட்டதுபோல் கேட்டது ''அதனால் தானே உங்களை நான் நேசிக்கிறேன் அன்பரே மிருகநிலை மறந்து புனித காதலுக்குத் தொண்டுசெய்வோம்!'' என்றுஅப்பொழுது சம்மதம் தெரிவிக்கிறாள் அவள்.

புனிதக்காதல் காண வேண்டுமென்றவெறியோடு அவளும், அவனும் தங்களை மறந்து அந்தக்குளக்கரையில் இன்பச் சங்கமிப்பில் பிணைப்புற்றதனால் காதல், கலியாணமாகவே முடிந்துவிட்டது. மூன்றுநாட்களாக அவர்களது திருமணலீலை அந்தக்குளக்கரை ஓரமாக நிலைபெற்றது! அவர்கள் உணவை மறந்து உறக்கத்தை மறந்து இன்ப இணைப்பில் பூரித்துக்கிடக்க நாலாவதுநாள் பிறந்துவிடுகிறது. கதிரவனின் 'சுடுகதிர்' அவர்களது கடிய தோல்களில் பட்டுச்சுள்ளிட்டு உறைக்க இருவரும் குளக்கரைப் புல்வெளியில் படுத்து 'இரை' மீட்டலாயினர்.

கதிரவன் அசைந்து அசைந்து நடுவானத்தில் ஒளிப்பிளம்பாய்க்கனல்காட்டும் நேரம். அவளது உருவத்தையே மனத்துக்குள் அடைத்து வைத்திருக்கும் காளை புல்வெளியை விட்டு மெதுவாக எழுந்து குளத்துக்குள் சென்று நீர் அருந்தியது. அவ்வேளை மறலியின் கையிலிருக்கும் பாசக்கயிறு விழுந்ததுபோல், முடிச்சு விழுந்த கயிறு காளையின்

# வற்றாத நீரூற்று

## தாழையடி சபாரத்தினம்

தூங்கிக்கொண்டிருந்த குழந்தை வீறிட்டு அலறியது. அன்னையின் அன்புக் கரங்கள் குழந்தையை ஆதரவோடு அணைத்தன. அவள் தூக்கம் இன்னும் கலையவில்லை. பழக்கத்தின் காரணமாக உதடுகள் மட்டும் ''அகிலா.... தூ கடா கண்ணே'' என்று அசைந்தன. பெற்ற தாயின் உடலின் கதகதப்பிலே பிள்ளை சிறிது ஆறுதலடைந்தது. 'ப்பா, .ப்பா....' என்ற முத்து முத்தான ஒலி குழந்தையின் செவ்விதழ்களில் மலர்ந்து உதிர்ந்தது. ஒரு வயதுகூட நிரம்பாத சவலையின் மழலைக் கருத்துக் கூற அங்கு யாரும் விழித்துக் கொண்டிருக்கவில்லை.

அகிலன் அவளது மூன்றாவது குழந்தை. ஒரு வயதுகூட இன்னும் சரியாகப் பூர்த்தியாகவில்லை. பசி எடுத்தபோது அழுவான். பால்குடித்ததும்சிரிப்பான். பொக்கை வாயைத் திறந்து கன்னம் குழியச் சிரிக்கும் ஜாலவித்தையிலே உலக சௌந்தர்யம் அனைத்தையும் பெற்றவள் கண்டாள். குழந்தைக்குப் பேசத் தெரிந்த சொற்கள் இரண்டே இரண்டு தான். ம்மா... என்பான்; ப்பா...என்பான். இந்த இரண்டு சொற்களையும் 'குழந்தை அமுதமெனமழலை பொழிகிறான்' என்று அவள் வர்ணித்தாள்.

குழந்தையின் ப்பா...ஒலி தொடர்ந்தது. அவள் கண் விழித்து எழுந்தாள். குழந்தையை அன்பு சொரிய அணைத்துப் பாலூட்ட முனைந்தாள். அப்பொழுதுதான் குழந்தை விக்குவது அவளுக்குத் தெரிந்தது. குழந்தை நன்றாக அழுதிருப்பானோ! நல்ல தூக்கம்... தன்னைத் தானே நொந்துகொண்டாள். குழந்தை விக்கிக் கொண்டேயிருந்தது. பால் குடிக்கவும் மறுத்தது. அவளுக்குத் தெரியும், குழந்தைக்குப் பசியில்லை. அப்போ ஏன் அழுகிறான்? வயிற்றில் வலி கண்டிருக்குமோ?

அவள் பயந்துவிட்டாள். எழுந்திருந்து குழந்தையை மடியில் எடுத்துக்கொண்டாள். குழந்தை இப்பொழுது அழவில்லைத் தான். ஆனால் விக்கிக்கொண்டிருந்தது. 'ப்பா......'-குழந்தையின் உதடுகள் பொருமலோடு அசைந்தன.


அன்றுமாலை நடந்த சம்பவத்தை அவள் எண்ணிப் பார்த்தாள். மூன்றுநாள் விடுமுறையில் அவள் கணவன் ஊருக்கு வந்திருந்தான். அகிலன்மேல் அவனுக்குக் கொள்ளை ஆசை. விடுமுறையில் நின்ற மூன்று நாட்களும் குழந்தையை அவன் கையிறக்கவில்லை. தூங்கும்போதுகூட அவன் குழந்தையை அணைத்துக் கொண்டே தூங்கினான். பாலூட்டும்போது மட்டும் அவள் குழந்தையைத் தன்னருகே அணைப்பாள். பாலூட்டியதும் தானாகவே குழந்தையை அவனருகே படுக்க வைப்பாள். தந்தையும் தனயனும் ஒருவரையொருவர் அணைத்துக்கொண்டு தூங்கும்காட்சி அவள் இதயத்தே அணையாத இன்ப அலையைப் பரப்பியது. குழந்தையின் அமுதூறும் வாயிலிருந்து உதிரும் 'ப்பா......' என்ற சொல்லைக் கேட்டதும் அவன் காதில் தேன்மாரி பொழிந்தது. இன்பத்தின் எல்லையை எட்டிப்பிடித்தவன் போல் மகிழ்ந்தான்.

''கள்ளனுக்கு அப்பாவைத் தெரிகிறது, 'அப்பா' என்று கூப்பிடுகிறான் பார்த்தீர்களா?'' என்று அவள் இன்பபோதையில் மெய் மறந்து கூறும்போது அதை ஆமோதிப்பவன் போல் ஆசையோடு குழந்தையை அள்ளி அவன் முத்தமிடுவான்.

மூன்றுநாட்கள் மூன்று விநாடிகளாகக் கழிந்து விட்டன. நேற்றுமாலை அவன் பயணம் புறப்பட்டு விட்டான். மூத்தவனுக்கு ஐந்து வயது. விபரம் தெரிந்தவன், அப்பா நானும் கூட வருகிறேன்'' என்று ஓலமிட்டான். இரண்டாவது பெண் குழந்தை. அவளுக்கு மூன்று வயதிருக்கும். அப்பாவோடு செல்லப்போவதாக அடம் பிடித்தாள்.

குழந்தைகளைச் சமாதானப்படுத்திவிட்டுப் புறப்பட்டான். அன்னையின் ஒக்கலையில் அகிலன்வீற்றிருந்தான். அப்பா எங்கேயோ போகிறார் என்ற விபரம் அவனுக்குத் தெரியாது. பற்றற்ற ஞானியைப்போல் அவன் முகம் நிர்மலமாயிருந்தது குழந்தையின் மாம்பழக் கன்னத்திலே அப்பா முத்தமிடும் போது அகிலன் தன் பொக்கை வாயைத் திறந்து சிரித்தான் அந்த இன்பநினைவோடு அவன் பிரயாணமானான்.

இன்னும் ஒரு வயது கூட நிரம்பாத குழந்தையை அதன் தாயுடன் விட்டு இரவு ரயிலில் பிரயாணம் செய்யும் தந்தையொருவனின் நினைவு அலைகள் எவ்வாறு அந்தக் குழந்தையைத் தாக்கிச்சித்திரவதை செய்துஅதன் மூலம் தாயை அலைக்கழிக்கிறதுஎன்றமனோதத்துவக் கருத்தை அடிப்படையாகக்கொண்ட



இக்கதை அமரர் தாழையடி சபாரத்தினம் அவர்களின் சிறுகதைத் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டது.

ஈழத்துச் சிறுகதையுலகின் முன்னோடிகளிலொருவரும் சிறந்த சிறுகதை ஆசிரியருமானதாழையடியவர்களின் இருபது சிறுகதைகளைக் கொண்ட புது வாழ்வு' என்னும் இந்நூல் இம்மாதம் 28-ம் திகதி யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் வெளியிடப்படவிருக்கிறது.

இதனைத்தொகுத்து வெளியிடுபவர் திருமதி மீனா சபாரத்தினம்.

அப்பா வெளியூர் சென்றுவிட்டதை அறியமுடியாத பருவம் என்று அன்னை எண்ணினாள். குழந்தையின் உள்ளத்துள் புகுந்து அதன் உணர்ச்சிகளை அறிய அவளால் எப்படி முடியும்?

குழந்தை இன்னும் விக்கிக் கொண்டேயிருந்தது. 'ப்பா ..' மந்திரத்தை ஓயாது உச்சரிக்கும் குழந்தையின் முகத்தை உற்றுப் பார்த்தாள். அடக்கமுடியாத வேதனை குழந்தையின் முகத்தில் பிரதிபலிப்பது போல் அவளுக்குத்தோன்றியது. அப்பாவின் நினைவு குழந்தையை வாட்டுகிறதோவென்று பயந்தாள். குழந்தை அப்பாவைப் பற்றிக் கனவுகண்டிருக்குமோ?

தன்குழந்தைப்பருவத்தை எண்ணிப்பார்த்தாள். ஐந்து ஆறு வயதில் நடந்த சம்பவங்கள்தான் - நிழல் போல அவள் நினைவுக்கு வந்தன. ஒரு வயதுக் குழந்தையின் உள்ளத்தை ஊடுருவிப் பார்க்க அவளால் முடியவில்லை. இப்பொழுது அவர் பிரயாணம் செய்துகொண்டிருப்பார் நேற்று இந்நேரம் அவர் குழந்தையை அணைத்தபடி தூங்கிக்கொண்டிருந்தார். அவர் உள்ளத்திலும் இந்தநினைவுச்சக்தி என் குழந்தையின் உள்ளத்தோடு தொடர்புகொண்டுவிட்டதோ...?

'ப்பா...' குழந்தை விக்கியது. பாலூட்டினாள். தாலாட்டினாள். தோளில் சாய்த்தபடி முற்றத்தில் உலாவினாள். குழந்தையின் விக்கல் அடங்கவில்லை.

அவள் கண்களில் நீர் முட்டியது. செய்வதறியாது திகைத்தாள். குழந்தையை ஆற்ற அவள் கையாண்ட முயற்சியெல்லாம் வீணாயின.

மங்கலாக எரிந்துகொண்டிருந்த விளக்கைத் தூண்டிவிட்டாள். அறையிலே ஒளி பரவியது. சுவரிலே மாட்டியிருந்த கணவனின் உருவப் படத்தருகே குழந்தையைக் கொண்டு சென்றாள். குழந்தை 'ப்பா...' என்றது. அதன் குஞ்சுக்கரங்களை எடுத்து முத்தமிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன.'

அன்றுமாலை நடந்த சம்பவத்தை அவள் எண்ணிப் பார்த்தாள். மூன்றுநாள்

மிடும் போது அகிலன் தன் பொக்கை வாயைத் திறந்து சிரித்தான் அந்த இன்பநினைவோடு அவன் பிரயாணமானான்.

# நீருற்று

கொண்டு சென்றாள். குழந்தை 'ப்பா...' என்றது. அதன் குஞ்சுக் கரங்களை எடுத்து முத்தமிட்டாள்.

வதை அவளது கண்கள் கண்டுவிடுகின்றன.

ஆம்! தூரத்தில் ஆறோ, குளமோ, வாய்க்காலோ, ஊற்றுநிலையோ ஏதாவது இருக்கவேண்டுமென்று ஊகித்துக்கொள்ளுகிறாள். அவளுக்கு 'நீர்' வேண்டும். மெல்ல ஒற்றை வழியால் நடந்துபோனவள் 'குடமேந்திய' பெண்களுக்காக விலகிக்கொடுக்க அந்த துடுக்குக்காரக் குமரிகள் அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டே "நல்ல புள்ளி நாகு. கட்டிலிருந்து பிச்சிற்று எங்கையோ ஓடுது. சொந்தக்காரன்தேடித்தவிக்கப்போகிறான்" என்று கதையளந்துகொண்டே நடந்து செல்லுகிறார்கள். அந்த வாசகங்கள் அவளது மனத்தில் 'காங்கை' ஏறிய இரும்புக் கம்பியாய் இழுபட, தான் இருந்த வீட்டை ஒரு தரம் நினைத்துக்கொள்ளுகிறாள்.

அடுத்த கணமே 'நினைவு' மங்க 'நீர்'நிலையை நோக்கித் தாவி நடக்கலானாள். அவளுக்கு முதல்காரியமாக இப்பொழுது தண்ணீர் வேண்டும் அதற்குப்பிறகு தான் மற்றவைகள். அவளது எண்ணம்போல் பாதையும் நீண்டுகொண்டே போக அசதியைப்பாராமல் அவளும் நடந்துகொண்டேபோகிறாள். அவளது நடையிலே ஒரு விறுவிறுப்பு. என்றுமில்லாத துடிதுடிப்பு. இலட்சியத்தை நோக்கி மின்னல் வேகப்போராட்டம் நடந்தும்புனிதத்தலைவனைப்போல் அவளுக்கும் ஓர் இலட்சியம் உண்டு. வாழ்ந்து கழித்த

வைக்கத் தன்னை மறந்து நீர் அருந்தி நின்றவளுக்கு தன் 'சொரசொரத்த'மேனியைத் தீண்டிப் புல்லரிப்பு உண்டு படுத்தும் ஒரு புது அனுபவம் ஏற்படலாயிற்று. தன்னை மறந்த மயக்கத்தில் நின்று அந்தமயக்கம்தெளிய கண்களைவிழித்துத் திரும்பிப் பார்க்கும் பொழுது அவளுக்குச் சரியான வெட்கம்வந்துவிடுகிறது. நெருங்கி வந்து தன் மேனி பட அவளோடு உறவாடிஅவளது 'இளமைத் திரியை'த் தூண்டிவிடும் ஓர் அன்னிய ஆணைப்பார்த்ததும் அவள் வெட்கப்படாமல் இருப்பாளா? இந்தச் சுகானுபவத்தை அவளது வாழ்நாளில் இன்னும்அவள் அனுபவிக்கவில்லை. இது தான் அவளது புதிய அனுபவம்.

அவளுக்கு அப்படி என்ன கொள்ளை வயதா? பார்ப்பதற்குக் 'கொளுகொளு' வென்று வாட்டசாட்டமாகக் காளையரின் நெஞ்சத்தைக் கொள்ளை கொள்ளுமளவுக்குப் 'பால் முலை' வளர்ந்து வெறிகாட்டி நிற்க வளர்ந்து நிற்கிறாள். அவளுக்குஅது தனிவளர்ச்சி. அவளோடு பிறந்த அவளது அண்ணனுக்கு இன்னும் கொம்புகூட் முளைக்கவில்லை. அப்படி இருக்கும்போது அவளுக்கென்ன வயது?

'காலை' என்ற சிறைக்குள்ளே இருந்துகவலையோடு போரடித்தும்தன்னை மட்டும் கவர்ச்சியாக வளர்த்துக் கொண்டாள். 'பருவம்' அல்லவா, அது அவளையும் அறியாமல் அவளிடம் பொங்கி வழிந்தது. அவளது 'பால்'

நெஞ்சைத் திருவி அவளுக்கு வெறியை ஊட்டிக் கொண்டே; "கண்ணே! நானும் உன்னைப் போல் அனாதைதான். தாய், தந்தையரை இழந்து ஒரு கொடுமைக்கார மனிதனின் வீட்டில் அடிமையாக வாழுகிறேன். கடவுள் நம் பரிதாபத்தைக் கண்டுதான் போலும் இன்று நம்மை ஒன்று சேர்த்து வைத்திருக்கிறார். அன்பே! என்னை நம்பு நான் உன்னைக்கடைசி வரைக்கும் கைவிடமாட்

மெதுவாக எழுந்து குளத்துக்குள் சென்று நீர் அருந்தியது. அவ்வேளை மறலியின் கையிலிருக்கும்'பாசக்கயிறு' விழுந்ததுபோல், முடிச்சு விழுந்த கயிறு காளையின் கழுத்தைஇறுக்கவே பயமும் ஏக்கமும் ஒன்று சேர "அம்...மா" என்று காளை தன்னை மீறிவாய்விட்டுக்கதறுகிறான்.

தனது காதலனின் 'ஏக்க ஒலி'யைக் கேட்டு நினைவு தடுமாறி அவள் அவனைப் பார்த்தபோது, அந்தக்

— ஆரையம்பதி ஆ. தங்கராசா —

டேன்."-அவளது அழகிய செவிகளைத் திருவிக் கொண்டே, உணர்ச்சி பொங்க உரைக்கிறான் அவன்.

"மிருகங்கள் என்றால் நமக்கு ஆசை, பாசம், தாபம், உணர்ச்சிஇல்லையா? மனிதர்கள்தாம் நாளுக்கு நாள் கோலம்மாறுகிறார்கள்.

காதல்,கலியாணம் பிரிவு, விவாகரத்து, கோடு, சர்ச்சை, பொறாமை, போட்டி, விபச்சாரம், வேதனை என்று அவர்கள் வாழ்க்கை ஒரே போராட்டமயமாகஇருக்கிறது நம்மைவிட ஓர்அறிவு கூடியவர்கள் பகுத்தறிவு என்ற எவருக்கும் கிடைக்காத சிறந்தஅறிவைப் பெற்றவர்கள் இப்படிப் பண்பு கெட்டு நடக்கிறார்களே இது முறைதானா அன்பரே?" என்று மனிதக் காதலின் ஊழலை அந்த மிருகப் பெண் குத்திக்காட்டிக் கேலி செய்ய, அந்தக் காளை "மனிதர்கள் பிழைவிட்டால் அது மன்னிப்புக்குப் போகிறது. நாம் சிலகுற்றம் செய்தாலும் மிருகவெறி எனக்குற்றம் சாட்டப்படுகிறது. பெண்ணே! மனிதர்களின் வாழ்க்கையிலே ஒரே வேதனையும்,விரக்தியுந்தான் நிறைந்து கிடக்கிறது. காதல் என்ற போர்வையில் காமத்தை வளர்க்கிறார்கள் நாகரிகமென்ற நினைப்பில் மனிதர்கள் ஆதிகாலக் காட்டுமிராண்டி நிலைக்குத் திரும்புகிறார்கள். பொதுவாகக் கூறப்போனால் மனிதர்கள் மிருகநிலைக்குத்தாவுகிறார்கள். அப்படியிருக்கும் பொழுது மிருகங்களாகிய நாம் தெய்வீகக் காதலை ஏன் நாடலாகாது?" என்று தன் நிலை மறந்து கேட்க அவள் தனது நீண்ட நெடுங் கண்களால் அவனைத்தாபம் பொங்கப் பார்த்து; "அன்பரே! மனிதர்கள் அற்ப

காட்சி அவளது நெஞ்சைக் குடைந்தெடுக்கிறது. முறுக்கேறிய 'மீசை'யைத்தாங்கிய ஒரு மனிதன் கயிற்றுத் தொங்கலைக் கையில் பிடித்த வண்ணம் 'யமதூதனாய்' அங்கு நின்று கொண்டிருக்கிறான். அவனுக்கு உதவியாக மற்றுமிரு இளைஞர்கள். அவள் நிலை தடுமாற, அவளது அந்தப் பெருங்கண்கள் கண்ணீரை மழையாகச் சொரிந்த வண்ணமிருக்கின்றன.

அந்த மனிதன் காளையை இழுத்துக் கொண்டு போகிறான். போகும்பொழுது அவனது வாய் கோபத்தோடு; "நாலு நாளாக என்ன நாயலைச்சல் படுத்திப் போட்டா சும்மா வச்சிருந்து உணவு போடுறனே அந்தக்கொழுப்பு. உனக்கு மறிப்படுற எண்ணம் வந்திற்று. இனி உன்ன உழவுக்குத்தான் போடவேணும்" என்று கூறி, காளையின் கழுத்து இறுகி வேதனை காட்டுமளவுக்கு இழுத்துக் கொண்டு போகிறான். காளையோ அவனது இழுவைக்கு மசிந்து கொடுக்காமல் நிலத்தில் கால்களை ஊன்றியபடி, காதலியைத் 'தாபம்' நிறைந்த ஏக்கத்தோடு பார்த்துநிற்க,நின்று கொண்டிருந்த இளைஞர்களுக்குக் கோபம் வந்துவிடுகிறது. பக்கத்தில் கிடந்த தடி ஒன்றை எடுத்து முதுகு வீங்க அடிக்கிறார்கள். அடியின் வேதனையைத் தாங்க மாட்டாமல் காளைஅவர்கள் இழுத்த பாதையால்நடந்து போக, அவள், அம்மா"... ..."அம்......மா" எனஅழுது துடிக்கிறாள்.

அந்தத் துடிப்பு என்னைத் தனியாக விட்டுப்போகிறாயா என்று கேட்பதுபோல் அந்தக் காளைக்குப்பட்டதோ அவனும் பதிலுக்கு "அ... ம்...மா" என அழுது துடிக்

கிறான். அவர்கள் விட்டால் தானே, கால்கள் நிலத்தில் இழுபட இழுத்துச் செல்கிறார்கள். அவன் போய்விடுகிறான் அந்தக் காளையின் 'பரிபாஷை' அவளுக்குத் தானே தெரியும். மனிதர்களின் மிருகத்தன்மையைப் பார்த்து அவளது மனம் பொங்கித் துடிக்க, கற்சிலையாக அந்தப் புல்வெளியில் ஒரு சில விஞடிப் பொழுது படுத்துக் கிடந்துவிட்டு, தானிருந்த வீட்டுக்கு, அந்தச் சிறைக்கே எழுந்து திரும்பவும் போகிறாள்.

காதலன் தன்னைத் தேடி வருவான், தேடி வருவான் என்ற நம்பிக்கையைத் 'தவமாக' மனத்தில் வளர்த்து அந்தச் சிறையிலே பல மாதங்களைக் கழித்துவிட்டாள். ஆனால் அவனோ ஒரு நாளும் வரவுமில்லை, அவளை வந்து பார்க்கவுமில்லை. அவளுக்கு அவன்மேல் சரியான கோபந்தான். ஏன் அவர் வரவில்லை? அவருக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்துவிட்டதோ என்று அவள் மனம் துடித்துக்கொண்டே இருந்தது. கவலை, ஏக்கம், தவிப்பு இவைகளையும் மிஞ்சிக் கொண்டு அவள் 'தாய்மை' அடைந்துவிட்டாள். ஆம்! அவளது வயிற்றில் இத்தனை மாதங்களாக வளர்ந்துவந்த அது, 'இளங் காளையாக' மண்ணில் பிறந்து நிற்கிறது. அவளது காதலனை உரித்து வந்ததுபோல் அந்தக் காளை பிறந்து நின்றது.

அவளது 'பெண்மை' கொதிப்படைகிறது. தன் குழந்தையைக்கூடப் பார்க்க வராத தந்தையும் ஒரு தந்தையா என்று ஆத்திரக் கணை வீசியது. தெய்வீகக் காதலைப் பற்றிப் பேசிப் பெருமைப்பட்டவர், மனிதர்களின் மிருக நிலையைப் பழித்துத் தூற்றியவர், மனிதக் காதலை எள்ளி நகையாடியவர், மிருக நிலையை மறந்து உண்மையான மனித நிலைக்குத் திரும்ப வேண்டுமென்று சபதம் போட்டவர் இவ்வளவு காலமும் மறந்து வாழுவதா? "மிருகம் மிருகம்தான்-மனிதன் மனிதன்தான்" என்று அவளது மனம் தீர்ப்புக் கூறி விட்டது. என்றாலும் அவளது 'பெண்மனம்' காதலனை ஒருதரமாவதுபார்த்து விடத் துடித்த வண்ணமே இருந்தது.

அவள் தனது குழந்தையையும் மறந்து காதலனைத் தேடிப்போகிறாள். காதலன்

இருக்கும் இடத்தைப் போய்ப்பார்த்தால் அவனை அங்கே காணவில்லை. அவன் எங்கே போயிருப்பான்? அவளது நம்பிக்கை தவிடு பொடியாகிவிடுகிறது. "இந்த ஆண்வர்க்கமே இப்படித்தான். ஆசைகாட்டி மோசம் செய்யும் பித்தர்கள். அவர்களது வெறி தணிந்த பிறகு எங்களைத் துரும்பாக நினைக்கிறார்கள்" இப்படியெல்லாம் அவள் நினைத்திருக்கவேண்டும். காதலனைத் திட்டிக்கொண்டு தன் காலைக்கே திரும்புகிறாள். அவள் எவ்வளவு ஆசையோடு வந்தாள். அவனோ தான் மிருகமென்பதை நிரூபித்துக்காட்டி விட்டானே!

அவள் இதோ தன் 'காலை'யை நெருங்கிவிட்டாள். அதென்ன பயங்கர உறுமல் சத்தம் "உர்...ர்..." என்ற ஆவேச ஓசை. அவளது பெண்மை பயத்தால் நடுங்கிச் சாகிறது. தன் அன்புச் செல்வனுக்கு ஏதாவது ஆபத்து வந்துவிட்டதோ? தாவிப்பாய்ந்து 'காலை'க்குள் ஓடிப்போகிறாள். அங்கே அவள் கண்ட காட்சி: அவ

ளையே நிலை தடுமாற வைக்கிறது. அவளது வயிற்றிலே பிறந்த 'அன்புக்காளை' குற்றுயிராய் இரத்த வெள்ளத்திலே கிடக்க, வெறி கொண்ட கோலத்தோடு தன் காதலன் மண்ணிலே கொம்புகளை முட்டிக் கொண்டு நிற்பதைக் காணுகிறாள்,

அவளுக்கு எல்லாமே புரிந்துவிடுகிறது. அடுத்த கணமே "அம்...மா" என ஓசை எழுப்பிக்கொண்டு தன் மகனை 'நாக்கால் திருவு'கிறாள். பிறகு அவளது 'தாய்மை' விழித்துக் கொண்டு ஆவேசமாகத் திமிறிப் பொங்க தன் காதலனைக் கண்களால் தாக்கி, கொலைகாரனாகிய நீ எனது கண்களுக்கு முன்னே நிற்க வேண்டாம். தான் பெற்ற குழந்தையை எந்தத் தந்தையாவது கொல்வானா? இந்த அழகை வைத்துக்கொண்டு தானா மனித நிலைக்குத் தாவப்போவதாகச் சபதம் வேறு பூண்டீர்கள். மிருகம் மிருகம்தான். மனிதன் மனிதன்தான். இந்த இயற்கை

நியதியை என்றுமே மாற்ற முடியாது இப்பொழுது நீ என்னுடைய காதலனல்ல, என் குழந்தையைக்கொன்ற கொலைகாரன் - முழு எதிரி என்று கூறிக்கொண்டே அவள்- அந்த நாகு தன் கொம்புகளை நிமிர்த்திஅவன் மேல், அந்தக் காளைமேல் பாய்ந்தாள். பல நிமிடங்கள் உக்கிரமான மிருகப் போர் அங்கு நடந்தது; "பெண்மை" இறந்து மண்ணில் தோற்று விழ "ஆண்மை" வாகைசூடி பூரிப்போடு கொம்புகளில் குங்குமமாய்க் குருதியைப் பூசிக்கொண்டு தான் மிருகந்தான் என்பதைப் பறை சாற்றியவண்ணம், தான் வாழுமிடத்தை நோக்கி "மிருகவெறி" முதத்தில் கொப்பளிக்க நடந்து செல்கிறது. அப்பொழுதுதான் அந்த வீட்டுக்காரக்கிழவன் 'காளை'யைத்துரத்த ஓடிவருகிறான்.

(யாவும் கற்பனை)

# இனிய பொழில்

—ஏழாலையான்—

ஆடும் தோகை மயில்கண்டு
ஆட வரோடு மங்கையரும்
கூடும் இனிய வண்டுகளைக்
கூட்டும் நல்ல தேன்பொழிலே
பாடும் புலவன் இன்னிசைபோல்
பாடும் நனிநல் வண்டுறையும்
சூடும் மகளிர் முகம்போல
சூட்டும் பூக்கள் நிறைந்திடுமே.

மேவும் வண்டு இசைபாட
மேன்மை கொண்ட மங்கையரும்
கூவும் இனிய பூங்குயிலும்
கூடும் அன்றிற் பறவைகளும்
தாவும் கல்லா மந்திகளும்
தவமும் நன்னீர் அருவிகளும்
காவுள் கதலி கலித்திருக்கும்
கமஞ்சூழ் நறிய நற்பொழிலே.


"சிறுதுளி பெருவெள்ளம்" "நூற்றுக்கு மேல் ஊற்று"

## தம்பி அன் கோ.,

நவீன சேமிப்பில்
ரூபா நூறு நூறுகச் சேர்த்து
ரூபா ஆயிரம் ஆயிரமாக எடுக்கலாம்.

மாதம் ரூபா 100 வீதம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | மாதம் | ரூபா 1200/- | கட்டினல் | ரூ. 1280/- | வாங்கலாம் |
| 24 | ,, | ரூபா 2400/- | ,, | ரூ. 2670/- | ,, |
| 36 | ,, | ரூபா 3600/- | ,, | ரூ. 4200/- | ,, |
| 48 | ,, | ரூபா 4800/- | ,, | ரூ. 5950/- | ,, |
| 60 | ,, | ரூபா 6000/- | ,, | ரூ. 7600/- | ,, |
| 72 | ,, | ரூபா 7200/- | ,, | ரூ. 9500/- | ,, |
| 75 | ,, | ரூபா 7500/- | ,, | ரூ. 10000/- | ,, |

முக்கியகுறிப்பு:

இச்சேமிப்பில் எப்பொழுதும் சேரலாம்
எப்பொழுதும் லாபத்துடன் எடுக்கலாம்

மறுவிபரங்கட்கு:

## தம்பி அன் கோ.,


வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்நாட்டுக்கலைஞர்கள்

# 'தேவன் ஒரு தனி இயக்கம்'



சேவையில் தோய்ந்த முழுமையான சிரிப்பு—

பாராட்டுதல்களுக்கும், போற்றுதல்களுக்கும் சரண் அடைந்துவிடாது பக்குவப்பட்ட மனத்தெளிவு—

வயதின் வேறுபாடுகள், பணத்தின் கொழுப்பு மெலிவு, குடிசை மாடிவீடு, இவற்றைப் பொருட்படுத்தாது யாரையும் மனம் திறந்து வரவேற்கும் பண்பின் உயர்ச்சி-

'தலைசிறந்த' என்ற சொல்லுக்குத் தகுதி வாய்ந்த வளர்ச்சியடைந்திருந்தும் இறுமாப்பு, சலசலப்பு சிறிதுமில்லாத இனிய சுபாவம்-

இத்தனையும்கூடி ஒரேயிடத்தில் நிற்பதைக் காண்பது இக்காலத்தில் முடியாத காரியம். இதற்கு விதிவிலக்காக நல்லதொரு வழியை விட்டு விலகாது அமைதியாகச் சென்று கொண்டிருக்கிறார், யாழ்ப்பாணத்துத் தேவன்.

எப்படித் திருப்பிப்போட்டாலும் ஒரே வயதைக் காட்டும் வயது அடைந்துள்ள (44 வயது) யாழ்ப்பாணம் இ. மகாதேவாவின் உழைப்பு சமீபகாலத்தில் ஈழத்தில் ஏற்பட்டிருக்கும் கலை மறுமலர்ச்சியில் ஊறிச்செறிந்து பரவி நிற்கிறது என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள்.

நாடகத்துறை, இலக்கியத்துறை, விளையாட்டுத்துறை இப்படிப் பலதுறைகளில் தேவன் தனது சேவையைச் செம்மையாகச் செய்து கொண்டிருக்கிறார்.

போலிப்புகழுக்காக பெரியதொரு வட்டாரத்தைத் தேடிப்பிடித்து அதில் தொங்கிக் கொண்டிராது, உதவிக்கு வருபவர்களை உதறிவிடாமல் மன நிறைவோடு முடிந்ததைச் செய்து அதில் ஓர் ஆத்ம திருப்தி காண்கிறார் தேவன்.

நாடகத்துறையில் கால் நூற்றுண்டுக்குமேல் நல்ல ஈடுபாடு கொண்டிருக்கும் தேவனை "ஈழத்தில் யார் சிறந்த நடிகர் என நீங்கள் கருதுகின்றீர்கள்?" என்று கேட்டேன்.

சந்தேகமில்லாமல் வைரமுத்துதான் (மயானகாண்டம் பிரதான நடிகர் திரு. வி. வி. வைரமுத்து) என்றார். அவர் ஓர் ஒப்பற்ற

**கணேஷ்**

கலைஞர். அவரது மயான காண்டம் நாடகத்தில் அவருடன் இணையாக யாராவது திறமையானவர் நடித்தால் நாடகம் மேலும் மெருகு பெறும் என்றும் அடுத்ததாக லடீஸ் வீரமணியென்றும் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

கேள்வி:- சொர்ணர்...?

பதில்- கலையரசு சொர்ணலிங்கம் நாடகக்கலைக்காகப் பல தியாகங்களைச் செய்திருக்கிறார். மேடையில் ஏறுவதற்கு பலர் தயங்கிய காலத்தில் துணிந்து மேடையேறியவர். ஈழத்தில் நாடகக்கலையின் வளர்ச்சிக்காக தமது நேரத்தையும் பொருளையும் கணக்குப் பாராது செலவு செய்தவர் அவர்.

உங்கள் நாடகத்துறை அனுபவத்தில் மறக்கமுடியாத ஒரு சம்பவம் பற்றி சொல்கிறீர்களா?

எனது கேள்விக்கு சிறிது நிமிடநேரம் மௌனம் சாதித்தார் தேவன். முகத்தில் சிறிது சிறிதாக ஒரு சோகம் படர்ந்தது. சரளமாக சிரிப்பு இழையோடப் பேசும் தேவனின் வார்த்தைகள் தயக்கத்தால் பின்னின. சொல்கிறேன் என்று தொடர்ந்தார்.

'நான் தயாரித்த நாடகம் ஒன்று மேடையேறுவதற்கு சில நிமிடங்கள்தான் இருந்தது. டிக்கட் வாங்கிய ரசிகர்கள் மண்டபத்தில் கூடிவிட்டார்கள். என் காதில் இரகசியமாக ஒரு செய்தியை ஒருவர் தெரிவித்தார். எனக்கு உடலெல்லாம் வியர்த்தது. என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறிவிட்டேன். அவர் தெரிவித்த செய்தியை வெளியில் சொல்லலாமா சொல்லக்கூடாதா என்பதை முடிவு செய்ய சக்தியற்றிருந்தேன். அந்த நேரத்தில் நான் யாரைக் காணுதிருக்க வேண்டுமென்று நினைத்தேனே அவரே என்முன் வந்தார். 'மாஸ்டர் எனக்குச் செய்தி தெரியும் ஆனாலும் நான் உங்களையும் பொதுமக்களையும் ஏமாற்றிவிட்டுச்செல்ல விரும்பவில்லை. நடித்துமுடித்து விட்டுத்தான் வீடு செல்ல தீர்மானித்துள்ளேன்' என்றார்.

தந்தை இறந்துவிட்ட செய்தியைத் தெரிந்து கொண்டபின்னரும் துணிந்து மேடையேறி நடித்த அந்த மாணவரின் கடமை உணர்ச்சியை என்னவென்று சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை. இன்று அந்த

## போலிப் புகழுக்கு வட்டாரம்தேடாதவர்!

மாணவர் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருக்கிறார் என்று சொல்லிமுடித்தார் தேவன்.

பழம்பெரும் தென்னிந்திய நடிகர் டி. எஸ். பாலையா கர்நாடகப் பாட்டொன்றை ஈழத்து ரசிகர்களின் விருப்பத்துக்கிசையப் பாடியதையும் தேவன் தமது ஞாபகத்தில் வைத்திருக்கிறார்.

யாழ். முற்றவெளி மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் டி. எஸ். பாலையா தோன்றிப் பேசினார். பாடுங்கள் பாடுங்கள் என்று ரசிகர்கள் பலமான வேண்டுகோள் விடுத்தார்கள். நிலைமையைச் சமாளிப்பதற்காக தேவன் ரசிகர்களின் கோரிக்கையைத் திசைதிருப்ப முயன்றபோது பாலையாவே முன்வந்து தேவன் பிடித்திருந்த மைக்கை வாங்கி கர்நாடகப் பாட்டொன்றைப் பாடினார். பிரபல 'வில்லன்' நடிகருக்கு உதவப்போய் தாம் பட்டபாட்டைச் சொல்லிச் சிரித்தார் தேவன்.

தாம் கதை வசனம் எழுதிய ஒரு நாடகம் மேடையேற்றப்பட்டபோது தமக்கு அழைப்பு அனுப்பப்படாது விடப்பட்ட அனுபவமும் தேவனுக்கு உண்டு.

நாடகம் எழுதுவதென்பது எந்த எழுத்தாளனுக்கும் பெரிய சவால். இந்த சவாலில் தேவன் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறார். இந்த வெற்றி அவரது நாடகத்துறை உழைப்புக்குத் தைரியத்தைக் கொடுத்திருக்கிறது.

'நாடக ஆசிரியன் ஒருவனுக்குத்தான் தான் படைத்த பாத்திரங்களை நேரில் பார்க்கும் வாய்ப்பு கிடைக்கிறது. இது ஒரு ஆத்ம திருப்தியை அளிக்கிறது' என்று கூறும் தேவன் நாடகத்துறையில் தமது ஈடுபாடு பற்றி கூறினார்:

'1946-ல் முதன் முதலில் நாடகம் எழுதினேன், நடித்தேன். 'சிலம்புச் செல்வி' நாடகம் வீரபத்தினி என்ற தலைப்பில் நாடகமாக்கப்பட்டபோது அந்த நாடகத்தில் முதலில் நடித்தேன். இதில் மாதவியாகத் தோன்றியவர் வீரமணி. கோவலனாக நடித்தேன் நான்.

நான் எழுதிய சமூக நாடகங்களில் 'ஆவதும் பெண்ணாலே', 'படிக்காத கடிதம்' ஆகியவை எனக்குப் பிடித்தவை. 'ஆவதும் பெண்ணாலே' என்ற நாடகம் 'மை நேம்இஸ் மேரி' (எனது பெயர் மேரி) என்ற ஆங்கில நாவலின் தழுவல். இதைப் பார்க்கும்போது கீழைத்தேய நாடகம் ஒன்றைப் படிக்கும் உணர்வே எனக்கு ஏற்பட்டது. உதாரணமாக ஒரு வரி:

'புத்தகங்களின் நடுவே மடித்து வைக்கப்பட்ட ரோஜா இதழ்போல் உன் நினைவு எனக்கு என்றும் நிற்கிறது' இப்படி ஒரு வசனம் என் இதயத்தைத் தொட்டு நிற்கிறது.

'பெண் பாவை' (சிறிது பரபரப்பை ஏற்படுத்தியது) என்பது மொழிபெயர்ப்பு நாடகம். தமிழாக்கம் என்று சொல்லாது தழுவல் என்றும் சொல்லாது தமிழ் வடிவம் என்று இதைச் சொல்லலாம். காரணம் இந்த நாடகத்தில்வந்த பாத்திரங்களின் பெயரும் ஊரும் தமிழாக்கப்பட்டது தான். இக்கதையைத் தெரிவு செய்தவர் முன்னர் யாழ். அரசாங்க அதிபராக இருந்தவரும் இப்போது போஸ்ட்மாஸ்டர் ஜெனரலாக இருப்பவருமான திரு. வேணன் அபயசேகரா.

1956-ல் இதை தழுவி 'பத்தினியா பாவையா' என்ற நாடகத்தை நான் எழுதினேன் என்பதுதான் இதனோடு நான் சம்பந்தப்பட்டதற்குக் காரணம். 'டோல்ஸ் ஹவுஸ்' என்ற ஆங்கில நாடகத்தின் தமிழ் வடிவம் இது.

நமது சமுதாயத்திலும் சிங்கள சமுதாயத்திலும் குடும்பத்தில் பெண்களின் ஸ்தானம் என்ன என்பதை அலசும் நாடகம் இது. இது மக்களைச் சிந்திக்கத் தூண்டும் என வேணன் எண்ணினார். இந்த நாடகத்தைப் போல் கட்டுப்பாடாகவும் ஒழுங்காகவும் வேறு நாடகங்களை நான் தயாரிக்கவில்லை. எம் ஆர். ஏ. (தார்மீக புனருத்தாரண இயக்கம்) நாடகங்கள் தரத்தில் சிறந்தவை என்பது எனது அபிப்பிராயம்.

நாடகத்தின் தீர்ப்பு மக்களிடம்தான் விடப்படவேண்டும்.

இங்கு நாடக ஆசிரியனுக்கு உரிய மதிப்புக் கிடைப்பதில்லையெனக் கவலை தெரிவிக்கும் தேவன் இங்கு மேடையேற்றப்படும் நாடகங்கள்பற்றிய குறையையும் பின்வருமாறு தெரிவித்து அவற்றை நிவர்த்தி செய்ய சில யோசனைகள் கூறினார்.

கலைக்கழகம் இரண்டு மணிநேர விதியை வைத்திருக்கலாம். ஆனால் நாடகத்தின் காட்சிகள் எண்ணிக்கையில் கட்டுப்பாடு வைத்திருப்பது ஏற்றதல்ல. இந்தக் கட்டுப்பாடு தளர்த்தப்படவேண்டும் என்பது தேவனின் விருப்பம்.

மூவங்க நாடகங்கள் எழுதச்சொல்லி ஊக்குவிக்கலாம் என யோசனை தெரிவிக்கும் அவர் இங்கு இவ்வித நாடகங்கள் விருத்தி பெறவில்லையென்றும் கூறுகிறார்.

கலைக்கழகப் பரிசு பெற்ற 'தென்னவன் பிரமராயன்' என்ற தாம் எழுதிய நாடகத்தை மேடையேற்ற முடியாததற்குதேவன்கூறும்காரணம் ஏராளமான பணச் செலவு வரும் என்பதே.

தரமான நாடகம் தயாரிக்க 600 மணிநேர உழைப்பும் 6000 ரூபா வரையான பணமும் தேவையெனத் தெரிவிக்கும் தேவன் தமது வெற்றிபெற்ற நாடகங்கள் 'சிலம்புச்செல்வி', ''நளதம



நில்லையில் ஆனந்தக் கூத்தாடிய ஆடற்தெய்வத்துக்கு ஆடிஆடித் தன்னை அர்ப்பணம்செய்துவிட்டார் இந்தப் பத்மினி.

ஈழத்து நாட்டிய உலகில் தனக்கென்றோர் தனி இடத்தை வகித்துக் கொண்டிருக்கும் வேல்

# கலைஞர் வேல் ஆனந்தன் நாட்டிய உலகுக்கு அளித்த செல்வி பத்மினி!

ஆனந்தன், அழகுச் செல்வி பத்மினியை நாட்டியத் துறைக்கு அழைத்துவந்து அரங்கில் ஆடவைத்தார்.

பரதக்கலையின் நுணுக்கங்களை வேகமாகப் பயின்று, முன்னுக்குவந்து கொண்டிருக்கிறார் இவர்!

நாட்டியத்தில் இங்கு புதிய முறையை புதுமையாக வகுத்துத்தந்தவர் கலைஞர் வேல் ஆனந்தன் என்று சொல்லலாம். தனி நபர் நடனங்களையே பார்த்துப்பார்த்துப் பழக்கப்பட்டுவந்த நம்மவர்களுக்கு 'நடனக்குழு' முறையில் அமைந்த நடனங்களை அடிக்கடி பார்க்கும் வாய்ப்பை ஏற்படுத்தித்தந்தார். அவரின் குழுவில் இன்று முக்கிய இடம் வகித்துக்கொண்டிருக்கிறார், செல்வி பத்மினி நடராசா.

உடும்பராயைச் சேர்ந்த நடராசா தம்பதிகளின் மூத்த புதல்வி செல்வி பத்மினி.

கள்ளங்கபடமற்ற அழகுச் சிரிப்பு, கவர்ச்சியான உடலமைப்பு- பத்மினியின் அழகுக்கு அழகூட்டுகின்றன.

கடந்த நான்கு வருடகாலமாக கலைஞர் வேல் ஆனந்தனிடம் பயிற்சி பெற்றுவரும் இவரிடம் குருபக்தியும், அடக்க சுபாவமும் இருப்பதைக் காணமுடிகிறது. அகம்பாவத்தைமட்டும் இவரிடம் காணமுடியாது.

நாட்டின் முக்கிய இடங்களிலெல்லாம் இவர் வேல் ஆனந்தன் குழுவுடன் சென்றுநடனம்ஆடிப் பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

கலைஞர் வேல் ஆனந்தனின் 'விஸ்வாமித்திரா-மேனகா' நாட்டிய நாடகத்தைப் பார்த்தவர்கள் 'மேனகா'வை மறந்திருக்கவேமாட்டார்கள். இப்போதும் 'மேனகா' நெஞ்சத்தில்ஆடிக்கொண்டிருப்பதை உணர்வார்கள். 'மேனகா'வாகத் தோன்றிப்பார்த்தவர்களையெல்லாம் கவர்ந்தவர் அழகுமணி பத்மினி என்று சொல்லவும் வேண்டுமா?

''ஆடற்தெய்வத்துக்கு என்னை அர்ப்பணித்துவிட்டேன். காலமெல்லாம் அவனுக்குச் சேவைசெய்வதே என் லட்சியம்'' என்று அவர் கூறியபோது நாட்டியக்கலையில் உள்ள தீவிரக் காதலை உணரக்கூடியதாக விருந்தது.

'மேகலா' தயாரித்துத் தரும்

## கலை அரங்கம்

# இல்லத்தரசியின் இனிய கடமை

— 'தமிழ் பிரியை'

சமையல்

**கொக்கோ**

யான நெய்யின் அரைப் பங்கு நெய் ஆகியவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து அதில் ஓர் ஆத்ம திருப்தி காண்கிறார் தேவன். தியை ஒருவர் தெரிவித்தார். எனக்கு உடலெல் என்று ரசிகர்கள் பலமான வேண்டுகோள் விடுத்தார் தவை. ‘ஆவதும் பெண் ஹவுஸ்’ என்ற ஆங்கில நாடணுலே’ என்ற நாடகத்தின் தமிழ் வடிவம் இது.

# இல்லத்தரசியின் இனிய கடமை

— ‘தமிழ் பிரியை’ —

விருந்தோம்பல் என்பது வீட்டுக்குவரும் விருந்தினரை இன்முகம் காட்டி உபசரித்தல். இது பெண்மணிகளது இன்றியமையாத கடமையாகும். இக்காலத்துப் பெண்மணிகள் சிலர் இக்கடமையின் புனிதத் தன்மையை உணர்வதில்லை. வீட்டுக்கு வந்தவரைக்கால் கடுக்க நிற்க வைக்காமல் உட்காரச் சொல்லிப் பின்பு தான் குசலம் விசாரிக்க வேண்டும். அவர் குறிப்பறிந்து பசியையும் தாகத்தையும்தீர்க்கவேண்டும். நீங்கள் சிறிது முகம் சுழித்தாலும் வந்த விருந்தினர் முகம் வாடிவிடும். இதை அழகாக வள்ளுவர் எடுத்துக்காட்டுகின்றார்.

‘‘மோப்பக் குழையும்
அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும்
விருந்து.’

அனிச்சம்பூ தீண்டியவழியல்லது வாடாது. விருந்தினரோ முகந்திரிந்துநோக்கிய உடனேயே வாடிவிடுவர்.

இல்லாள் என்ற சொல் வழக்கு இருக்கிறதேதவிர இல்லான் என்ற எதிர்பாற் சொல் இல்லை. எனவே இல்லத்தையே ஆளும் பெருமை பெண்மணிகள் கையில்தான் உண்டு. கணவன் உழைப்பிலே குடும்பத்தை நிர்வகிக்கும் பொறுப்பு மனைவியிடம்தான் விடப்பட்டது. இது பண்டைக்காலம் தொட்டு ஏற்பட்டுவரும் ஓர் ஒழுங்கு முறை. ஒரு குடும்பத்தலைவனும் தலைவியும் தாம் கூடி இன்பமாக வாழ்ந்ததுமல்லாமல் விருந்தினரை நன்றாக உபசரித்தனர். அகநானூற்றுப்பாடல் ஒன்றில் தலைவன் தனது தலைவியை நினைக்கிறான். அவனுக்கு அவளது அழகு தென்படவில்லை. பின்பு எப்படி நினைக்கிறான். ‘விருந்து ஓயாத வீட்டின் பந்தலிலே வெளியூரிலிருந்து வருந்தி வந்துசேரும் விருந்தினரை ஓம்பி மகிழ்கின்ற என் துணைவி’ என்று நினைக்கிறான்.

கற்புக்கரசிகளாக விளங்கும் கண்ணகி, சீதை என்பவர்கள் கூட விருந்தோம்பலைத் தமது இன்றியமையாத கடமையாக எண்ணினார்கள். விருந்தினரை உபசரிக்க விரும்புகிறாள் கண்ணகி. ஆனால் தலைவனாகிய கோவலன் தன்னைப் பிரிந்து சென்றுவிட்டான். அது அவளுக்குப் பெரியமனக்குறையாகத் தென்படுகிறது. கண்ணகி ஓரிடத்தில் ‘விருந்தெதிர் கோடலும் இளந்த என்னை’ எனக்குறிப்பிடுகிறாள்.

இதுமட்டுமல்ல, சீதை இராவணனால் அசோக வனத்தில் சிறைவைக்கப்பட்டிருந்த போது இராமரை நினைந்து விருந்து கண்டபோது என்னுறுமோ என்று விம்மும் எனச் சீதை நிலையைக் கம்பர் எடுத்துக்காட்டுகிறார்.

இளங்கோவும் கம்பரும் கண்ணகி சீதை இருவர் வாயிலாக விருந்தோம்பலை எடுத்துக் கூறுமுகத்தால் விருந்தோம்பல் பெண்மணிகளது இன்றியமையாத கடமை என்பதை உய்த்துணரவைக்கிறார்.

சமையல்

## கொக்கோ சாக்லட்

தேவையான பொருட்கள்

இரண்டு மேசைக்கரண்டி கொக்கோ பவுடர்

இரண்டுசுண்டு பசுப்பால்.

ஒரு சுண்டு சர்க்கரை.

3 அவுன்ஸ் நெய்.

2 அவுன்ஸ்கசுக்கொட்டை.

செய்யும் முறை

பால், சர்க்கரை, கொக்கோ பவுடர், தேவையான நெய்யின் அரைப்பங்கு நெய் ஆகியவற்றை ஒன்றாகக்கலந்து அடுப்பிலேற்றிக் கொதிக்கவிடவும். கொதிக்கத் தொடங்கியதும் அடுப்பை இலேசாக எரியவிட்டு சாக்லட் இறுகிவரும் பொழுது மீதி நெய்யையும் விட்டுக்கிளறி நெய் தடவிய தட்டில் ஊற்றி பரப்பி சிறு துண்டுகளாகக் கசுக்கொட்டையை நறுக்கி மேலே தூவவும். ஆறியபின் விருப்பமான வடிவங்களில் துண்டுகளாக வெட்டிப்பரிமாறலாம்.

நாடகங்கள்பற்றிய குறையையும் பின்வருமாறு தெரிவித்து அவற்றை நிவர்த்தி செய்ய சில யோசனைகள் கூறினார்.

நடிகர்கள் மேடையில் ஏறிய பின்னரே வசனங்களைப்பற்றி யோசிப்பதும் தமக்குப் பிடித்த வசனங்களைப் பேசுவதும் நாடகத்தின் தரத்தைப் பெரிதும் பாதித்துவிடும்.

தரமான நாடகங்கள் தயாராகவேண்டுமானால் நல்ல நாடக ஆசிரியர் எழுதிய நாடகங்கள் வார்த்தைக்கு வார்த்தை அப்படியே பேசி நடிக்கவேண்டும்.

ஒரு தும்மல், ஒரு பெருமூச்சு என்றால்கூட நாடக ஆசிரியனுடைய ‘ஸ்கிறிப்டில்’ இருக்கவேண்டும். அதையே நடிகன் பின்பற்ற வேண்டும்.

ஒரு நாடகத்துக்கு குறைந்தது ஐம்பது ஒத்திகையாவது தேவை.

காட்சிக்குத் தேவையில்லாத பொருள்கள், மைக், சீன்கள் கட்டித் தொங்கவிடப்படும் கயிறுகள் இன்னும் சிறிய பொருள்களாக இரு தால்கூட காட்சியில் தென்படுவது நாடகங்களிலிருந்து விலக்கப்படவேண்டும். இவையெல்லாம் நாடகத்தில் கருத்தூன்றியிருக்கும் மக்களின் மயக்க உணர்வைத் தகர்த்துவிடுகின்றன.

ஒவ்வொரு ஊரிலும் நல்ல நாடக அரங்குகள் அமைக்கப்பட்டு நல்ல ஒலி, ஒளி அமைப்பு வசதிகள் செய்யப்படவேண்டும். அப்பொழுதுதான் நாடகக்கலை இங்கு செழிப்புற்று வளரும்.

பெண்களே பெண்கள் பாத்திரங்களை ஏற்று நடித்தால்தான் ஒரு நாடகம் முழுமை பெறும்.

இன்றைய அத்தியாவசிய சமூக சீர்திருத்தக் கருத்துக்களை, சிந்தனைக்குரிய கருத்துக்களை வெளிப்படுத்தக்கூடிய நாடகங்கள் நமக்குத் தேவை. இதனால் நாடகக் கலை வளர்வதோடு அதன் மதிப்பும் உயரும். இக்கலையின் தேவையும் அதிகரிக்கும்.

ஈழத்தில் நாடக வளர்ச்சி எண்ணிக்கையில்தான் தரத்தில் இல்லை.

மட்டக்களப்பில் நாட்டுக்கூத்து அதன் இலக்கணத்துக்கு அமைய இருக்கிறது. இங்கு கட்டுப்பாட்டுக்கமையாத நாடகங்கள் பல இருக்கின்றன.

பிரதேசக் கலாமன்றம் இங்கு பெயரளவில்தான் செயல்படுகின்றது என்பது தேவனின் துணிவான அபிப்பிராயம்.

பும் 6000 ரூபா வரையான பணமும் தேவையெனத் தெரிவிக்கும் தேவன் தமது வெற்றிபெற்ற நாடகங்கள் ‘சிலம்புச்செல்வி’, ‘‘நளதமயந்தி’ ஆகியவையே என ஆத்மதிருப்தி கொள்கிறார். இவை பாடசாலை நிதிக்காக நடத்தப்பட்டபோது சேர்ந்த தொகை ரூ 20,000.

தாம் நடத்தும் நாடகங்களோடு பிறர் நாடகங்களையும் ஒத்திகை பார்த்துச் செம்மைப்படுத்தவும்செய்கிறார் தேவன்.

ஏதேனும் நல்லவிழாவா, யாரினதும் நடன அரங்கேற்றமா, மொழிபெயர்ப்பா, நூல் வெளியீடா எல்லாவற்றிற்கும் தேவன் சென்றால் தான் சிறப்பாக அமையுமென்பது இப்போது வழக்கமாகிவிட்டது. தேவனின் கம்பீரமான குரல், வளர்ந்த ஆற்றல், இனிய சுபாவம் இவற்றிற்கெல்லாம் இழுத்துச்செல்கிறது. சுயநலத்தின் நிழல் தெரியாமல் நல்லதைச் செய்யவேண்டும் என்ற நிறைமனதோடு இவற்றில் பங்கு கொள்ளும் தேவன் நமது சமூகசேவையில் ஒரு தனி இயக்கம்.

டேன். காலமெல்லாம் அவனுக்குச் சேவைசெய்வதே என் லட்சியம்’’ என்று அவர் கூறியபோது நாட்டியக்கலையில் உள்ள தீவிரக் காதலை உணரக்கூடியதாக விருந்தது.

கலைஞர் வேல்ஆனந்தனின் திருநெல்வேலிகலைக்கோவில் நடனக்கல்லூரியிலுள்ள கீழ் வகுப்பு மாணவிகளுக்குஇப்போது நடனமும் சொல்லிக்கொடுக்கும் பணியைச் செய்துவருகிறார் பத்மினி.

மேடையில் அழகு நடனம் ஆடும் பத்மினி இதயத்திலும் ஆடச்செய்கிறார்.

—பாமா

## சாயிபாபா பக்தர்!


நகைச்சுவை நடிகர் நாகேஷ் வியாழன் தோறும் தவறாமல், மலையிலுள்ள சாயிபாபா கோவிலுக்குச் செல்கிறார். அங்கு சாயிபாபாவை பக்தியுடன் கும்பிடுகிறார். படப்பிடிப்பு இல்லாத நேரத்தில் வெங்கடநாராயணா ரோடுக்குச் சமீபத்திலுள்ள விளையாட்டு மைதானத்துக்குச் சென்று ‘பாட்மின்ரன்’ விளையாடிவிட்டுப்போகிறார்.


குடும்பச் சுடர்

தயாரிப்பு குணம்



மங்கையர் அங்கங்களுக்கு அதீத அழகைக் கொடுப்பது
நவ நாகரிக அமைப்பு வாய்ந்தது.
உத்தரவாதமுள்ளது
தெய்வா நகை மாளிகையின்
தங்க வைர நகைகள். .
இன்றே விஜயஞ்செய்யுங்கள்



தெய்வா நகை மாளிகை
173, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.



‘‘லேடன்’’ LEYDEN தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330


## உணவு உலகில் வீழ்ச்சி

‘உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே’ என்கிறது மணிமேகலை. உணவே உயிர். உணவு மிகுந்தாலும் நோய். உணவு குறைந்தாலும் நோய். இது வள்ளுவர் கண்ட வைத்தியம். உங்களிற்சிலர் நிறையச் சாப்பிட்டு நோய்வாய்ப்படுகின்றனர். பலர் குறையச் சாப்பிட்டு நோகின்றனர். சமஉணவு சாப்பிடுகின்றவர் மிகச்சிலரே.

சுவையின் பொருட்டு உணவுப் பொருட்களை நன்றாகக் கொழுப்புச் சத்துள்ள நெய்யில் வறுத்து அவற்றை உயிரூட்டமற்றதாக்கி கெடுத்தபின்பு உண்கின்றீர்கள். கடலைமா போன்ற மாக்களினால் ஆன பண்டங்கள் குடலைக் கெடுப்பன. அவற்றை ‘டிபன்’ என்ற பெயரால் உண்டு கெடுகிறீர்கள்.

இதுமட்டுமா; நாகரீகம் என்று பறைசாற்றிக் கொண்டு ஒரு துண்டுபாண், கோப்பி அருந்தும் பழக்கம் உங்கள் மத்தியில் வந்துவிட்டது. கம்பு, சோழம், குரக்கன், சாமை, தினை, கேழ்வரகு, குதிரைவாலி போன்ற சத்துமிகுந்த சிறு தானியங்கள் மறைந்துவிட்டனவே. மாச்சத்து மிகுந்த அரிசி ஒன்றையே நம்பி அதையுண்டு நாசமாகிறீர்கள். பயறுவகைகள், காய்கறி வகைகள் உங்கள் உடம்பில் போதியளவு சேர்வதில்லை. கீரை அன்றாட உணவில் ஒன்றாக எத்தனைபேர் வீட்டிலுள்ளது?

போதிய அளவு சமஉணவு சாப்பிடுபவர்கள் குறைந்து போனதால் உங்கள் மத்தியில் நோஞ்சான்களும், பயந்தாங்கொள்ளிகளும் இன்று பெருகிவிட்டனர். கோப்பி போன்ற நச்சுப்பானங்கள் பல்கிவிட்டன. தாகம் வந்த போதெல்லாம் சுத்தநீர் குடிப்பதைத் தவிர்த்து கோப்பி குடிப்பவர்தொகை அதிகரித்துள்ளது. இன்று உண்ண வழியற்றவர் கூட புகைக்கச் சிகரெட் இல்லாமல் இருப்பதில்லையே. இவற்றோடு சம உணவற்ற தன்மையும் சேர்ந்து உங்கள் வகுப்பினருக்கே இன்று எண்ணற்ற பல வியாதியைத் தேடித் தந்துள்ளன.

எங்களைப் பாருங்கள்! நாங்கள் சம உணவாளிகள். காடு மேடெல்லாம் தேடிச் சிறுதானியங்களை உண்கிறோம். பழங்கள் பலவற்றைச் சுவைக்கிறோம். இதனால் நீரழிவு, இரத்த அமுக்கம், இருதய பலவீனம், ‘கொறோனறித்றொம்போஸிஸ்’ போன்ற உங்களைப் பிடிக்கும் பலவித வியாதிகள் எங்களை எட்டிப் பார்ப்பதுகூடக் கிடையாது. ஆகவே நீங்களும் எங்களைப்போல் சுகதேகிகளாக வாழ சிறு தானியங்களையும் கீரை பழவகைகளையும் உங்களது அன்றாட உணவில் சேருங்கள் பார்க்கலாம்!

— குடும்பச்சிட்டு

சமையலறை மருத்துவம்

## மயக்கம்தீர்க்கும் ‘மல்லிகா

பித்தம் தீர்ப்பதில் கொத்தமல்லிக்கு நிகர் வேறு இல்லை. பித்த மயக்கம் தீர்ப்பவள் இந்த மல்லிகா. மல்லிக்கீரை சிரண நீர் பெருக உதவுகிறது. இஞ்சிச் சாற்றுடன் வெல்லம், கொத்தமல்லி சேர்த்து உண்டால் பித்தம் தலைவலி, சுரம் நீங்கும். மல்லிக்கீரை அடிக்கடி உண்பவர்களுக்கு காமாலை நோய் வராது. மல்லி ரசம் சுவையுடையது.

## நினைவில் இருக்கட்டும்

ஆடம்பரமாக வாழ்ந்தால்தான் நாலுபேர் மதிப்பார்கள் என்று நினைப்பது தவறு. கஷ்டப்படும் போது கைகொடுக்க முன்வராத அந்த நாலுபேர் பாராட்ட வாழவேண்டிய அவசியம் இல்லை.

0 0 0

மனத்திருப்தி என்பது இயற்கையான செல்வம். ஆடம்பரம் என்பது செயற்கையான வறுமை.

0 0 0

ஆடம்பரமில்லாத எளிய வாழ்வும் அகந்தையில்லாத நடத்தையும்தான் ஒவ்வொருவருக்கும் சிறந்தது. அது உடலுக்கும் நல்லது. உள்ளத்துக்கும் நல்லது.

0 0 0

வறுமை கேட்பது சில பொருட்கள். செல்வம் கேட்பது பல பொருட்கள். பேராசை கேட்பதோ எல்லாவற்றையும்.

0 0 0

தேவைகளைப் பெருக்கிக்கொள்வதால் சதா அதிருப்தியில் உழல நேரிடுகிறது. ஆடம்பரமற்ற எளிய வாழ்வில்தான் உண்மையான மகிழ்ச்சியைக் காண முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'காணக் கண் கோடி வேண்டும்'

பொன்னரும் சுப்பரும் நாகரும் பழைய காலத்து நண்பர்கள். மூன்றுபேரும் 'ஈழ நாடு' பத்தாவது ஆண்டு நிறைவு விழாவைப் பார்க்கப்போயிருந்தார்கள். கூட துணைக்காக துரைசிங்கத்தையும் அழைத்துச் சென்றார்கள். பொன்னர், சுப்பர், நாகர் மூவரும் எழுபது வயதுக்கு மேற்பட்டவர்கள். நாட்டுக்கூத்து, திருவிழா, நாடகம் முதலியவற்றைப் பார்த்து பண்பட்டவர்கள். துரைசிங்கம் சிறியவன்.

'ஈழநாடு' விழா நடந்து முடிந்த அடுத்தநாள் காலையில் மேற்கூறிய மூவரும் கண்ணைக்கசக்கிக்கொண்டும் கொட்டாவி விட்டுக்கொண்டும் ஊர் முச்சந்திக்கு வந்தார்கள். இந்த நால்வருக்கும் இடையில் நடந்த சம்பாஷணையை நமது விசேஷ நிருபர் 'சுப்புடு' அரசமரத்தடியிலிருந்து ஒட்டுக்கேட்டு அப்படியே தருகிறார்.

பொன்னர்: தலை சுளுக்கிக்கொண்டது, சுப்பர் அண்ணை, என்ன செய்யலாம்?

சுப்பர்: கொஞ்சம் வேப்பெண்ணை தடவினுல் சரியாய்ப்போகும்!

நாகர்: ஏன் அண்ணை தலை சுளுக்கினது? ராத்திரி எக்கச்சக்கமாய் படுத்துக்கொண்டியோ?

பொ: சாச்சாய் ராத்திரி 'ஈழநாடு'க்காரன் நடத்தின வாணவேடிக்கையை அண்ணந்து பார்த்துப் பார்த்து கழுத்திலை சுளுக்கு வந்திட்டுது. அதுக்குத்தான் வேப்பெண்ணை தடவினுல் சுகமாயிருக்கும் எண்டு சுப்பர் சொல்லுகிறர்.

சு: எனக்கு கண் பார்வையே கொஞ்சம் மட்டம்தான். எண்டாலும் இந்த விழாவைப் பாக்கவேணுமெண்டு சொல்லிப்போட்டு விடிய வெள்ளென முத்தவெளிக்குப்போட்டன், பொடியள் இடுப்பு கட்டை ஒடி வந்துவிட்டான்களே, நாகர்.

பொ: பூ, இதென்ன பெரியகாரியம்! நான் நாடகமும் நாட்டியமும் பாக்க வேணுமெண்டு தான் ...

நிண்டு பாத்துக்கொண்டிருந்த நான். ஒரு பிச்சைக்காரன் வந்து எங்கடை எஸ். பி. சுந்தரலிங்கத்தாருக்குமுன்னலை நிண்டுகொண்டு போனியைத் தட்டினுன். அவருக்குத் தெரியுந்தானே அவர் சிரிச்சுப்போட்டு போட்டுவா எண்டு சொன்ஞர். அவன் அந்தப் பிச்சைக்காரன் வேஷம் போட்டவன் என்ன சொன்னுன் தெரியுமே! 'ஐய், நீரும் ஒரு மனுசனு! அஞ்சுசதம் குடுக்க முடியாமல் போட்டுவா எண்டு சொல்லுறீர்' எண்டு சொன்னவுடனே எஸ். பி. கூடக் கடகடவென்று சிரித்தார்.

நா:- நானும் பார்த்துக்கொண்டுதான் நின்டன். ஒரு சின்னப் பெட்டை மினிறறிக்காரன் போலை உடுத்துக்கொண்டு கையிலை ஒரு சின்னத் துவக்கோடை நிண்டது. பாத்தநீங்களே! அதுதான் எனக்குப் பிடிச்சது.

சு:- என்னவெல்லாமோ சொல்லுறியள் எனக்கெண்டால் அண்டு ராத்திரி நடந்த நாட்டியங்கள்தான் விருப்பம். அடடே. அந்தபிள்ளேயள் மான்போலை துள்ளி, மயில்போலை ஆடி, அன்னம்போலை நடந்து, என்ன ஆனந்தமாய் இருந்துது அதைப் பாத்துப் பாத்து எனக்குக் கண்ணெல்லாம் வலிக்குது.

து- நாடகங்களைத் தான் எனக்கு பிடிச்சுது.

பொ- எடமோனை, எது திறம், எது படான் எண்டு சொல்லமுடியாத முறையிலை எல்லாம் நல்ல வடிவாய் நடந்திட்டுது.

நா- அதுசரி, ஒப்பிடி ஒவ்வொரு வரியமும் 'ஈழநாடு' பேப்பர்காரர் ஒரு விழா நடத்தினுல் மெத்த சோக்காயிருக்கும்.

து- நடத்தாமல் விடப்போயினமே! நடத்துவினம்தான். ஆனல் அவையளுக்கு நாங்களும் உதவி செய்யவெல்லே வேணும்?

சு- நாங்கள் என்னடாப்பா உதவி செய்யிறது?

து- பாருங்கோ அண்ணை, யாழ்ப்பாணத்திலை நடக்கிற ஒரே ஒரு தினசரி தமிழ்பத்திரிகை அதுதான். தமிழர்தான் ...

— 'சுப்புடு' —

# பாவத்திலின்றும் மீட்சி பெற தொழுகை ஒன்றே சாதனம்

## பார்வையற்றவரும் பள்ளியில் தொழுதனர்

— எம். எச். எம். அப்துற்றஸ்ஸாக் —

அதிபர், வண்ணை அரசினர் முஸ்லிம் வித்தியாலயம்

நாங்கள் இறைவனின் பிரியத்தையும் அன்பையும் விரும்பினுல் இறைவனுக்குப் பிரியமானதும் பிடித்தமானதுமான நடையைக் கொண்டு வாழ்வை ஆரம்பிப்போமாக. நமது தினசரி வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றையும் செவ்வனே சீர்தூக்கி நெஞ்சிற்கைவைத்துப் பார்ப்போமாக. எங்களிலே எங்களைப்பற்றிக் கேள்வி கேட்கும் பழக்கம் உண்டாகி விடுமேயானுல் உண்மையிலேயே நாங்கள் ஓரளவு புத்திசாலிகள் என்று எண்ணிக்கொள்வோமாக! அதற்குப்பதிலாக மற்றவர்களின் தும்செய்கைகளை அலசிஆராய்ந்துதுருவித்துருவிக்குற்றங்காணவிளேவோமானுல் எங்களைவிட மோசமான பலவீன மனிதர் எவருமிரார். என்பதையும் மறவாமல் மனதிலே இருத்திக் கொள்வோமாக.

இவ்வரிய சிறந்த பழக்கத்தைக் கையாள்வதற்கு தொழுகை ஆணித்தரமான ஆயுதமாக அமைகின்றது. தொழுபவன் இரவுத் தொழுகையை முடித்துக் கொண்டு நித்திரைக்குப் போகுமுன், தனதுபடுக்கையிலே உட்கார்ந்திருந்து தனது அன்றைய செயல்களின் இலாப நஷ்டங்களை எடைபோட வேண்டும். காலையிலிருந்து இரவுவரை எத்தனை நல்ல காரியங்கள் செய்தேன். அவைகளிலே இறைவனுக்கென்றே பரிசுத்தமனத்துடன் எத்தனை காரியம் செய்தேன்? பிறர் மெச்சுதற்காக எத்தனை காரியம் செய்தேன்? எனது ஆதாயத்திற்காகவும், எதிர்கால வாழ்வுக்காகவும் எத்தனை காரியம் செய்தேன்? என்று பிரித்துப் பிரித்து அவற்றிலே நிகழ்ந்த கலப்படங்களையும் பக்குவமற்ற செயல்களையும் அக்குவேறு ஆணி வேருகப் பிரித்து அவற்றிற்காகப் பச்சாத்தாபமும் இறைவனிடத்தில் பாவமன்னிப்பும் தேடி நாளை செய்யும் கருமங்கள் நிச்சயமாக மிகப் புனிதமாக இருக்கவேண்டும்; எனது மனதைக் கட்டுப்பாட்டுடன் வைத்து ஆண்டவனுக்காகவே செய்பவைகள் அத்தனையும் அமைய வேண்டுமென்று திடப்படுத்திக் கொள்ளவேண்டும். எனவே இச் செய்கை தொழுகையாளியிடத்திலே மிக இலேசாக அமைந்து விடுவதாலேயே எல்லாக் கருமங்களுக்கும் தொழுகையை மூலாதாரமாக வைத்துப் போற்றிப் பாதுகாத்து வருகிருர்கள்.

இவ்வாருன விஞக்களைக் கேட்டுக்கொள்ளும் பழக்கம் அதற்கான பரிகாரம் தேடும் பழக்கம், நமது நாயகம் (ஸல்) அவர்களிடமும் அபூபக்கர் சித்தீக்(றழி) உமர் பாறூக் (றழி), உதுமான் (றழி), அலிய்யிம்னு-அப்தாலிப் (றழி) ஆகியோர்களிடமும் மிகைத்துக் காணப்பட்டன.

உமர் பாறூக்(றழி) அவர்கள் இரவு நேரத்திலே படுக்கைக்குப் போகுமுன் தம்முடைய பிரம்பை எடுத்து கையில் வைத்துக் கொண்டு காலையில் நடைபெற்றதமது ஒவ்வொரு விவகாரத்தையும் கேட்டுக்கேட்டுக் குறையானவைகளுக்குத் தம்முடைய பிரம்பைக் கொண்டு

வனுக்கு நன்றி செலுத்திய பின் நித்திரை செய்வார்கள். ஏதும் குறைவுள்ளதாகக் காணப்பட்ட இரவில் நித்திரைவராது மிகவும் அவஸ்தையுறுவார்கள். ஆகவே நாம் நேர்மையாக நடக்கப் பழக வேண்டும்.

### பார்வையற்றவரும் பள்ளியில் தொழுதனர்

ஒருமுறை இரண்டு கண்களும் தெரியாதஒருஸஹாபி நபிபெருமாஞரை அணுகி ''நாயகமே, எனக்கு இரு கண்களும் தெரியா. இராக்காலங்களிலே தூரத்திலிருந்து பள்ளிக்கு வருவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இரவுத்தொழுகைகளை மட்டும் வீட்டிலே தொழுதுகொள்ள அனுமதி அளியுங்கள்'' என வேண்டினர். அதைக்கேட்ட பெருமாஞரவர்கள், அந்தஉத்தம ஸஹாபியை நோக்கி, ''ஒரு ரூபாவுக்குப்பதிலாகஇருபத்தேழு ரூபாவை நீர் விரும்பமாட்டீரோ? ஒரு ரூபா பகலிலும் இருபத்தேழுரூபாஇரவிலும் கொடுப்பதாயின் இரவில் வந்து இருபத்தேழுரூபாவையும் பெற்றுக்கொள்ள முற்படுவீரன்ருே? ஆகவே உமது வீட்டுக்கும் பள்ளிக்குமிடையில் ஒரு கயிற்றைக் கட்டிவிட்டு அதன் துணையுடன் இராககாலத்திலே பள்ளியில் வந்து தொழுது கொள்வீராக'' என்ருர்கள்.

### அல்லாஹ்வை நெருங்க வேண்டின்...

''என்னுடைய ஒரு நண்பஞகிய தொழுகையாளியை எவன் பகைத்துக்கொள்கின்ருனே அவன் என்னுடனே யுத்தஞ்செய்ய ஆரம்பித்து விட்டான். எனக்கும் அவனுக்கும் பொறுப்புக்கள் அற்றுவிடும். நான் அவனுக்குப் பாதுகாவலாகவோ பொறுப்பாகவோ இருப்பதிலிருந்து விலகிக்கொள்ளுகிறேன்'' என்று இறைவன்(அல்லாஹ்) தனது ஹதீதுல்குத்ஸியில் திருவுளமாகின்ருன். இவ்வுலகிலே தந்தையை எதிர்க்கும் மைந்தனைப்பற்றி ஒரு தந்தையின் மனம் எத்தனை நிந்தனையும் வெறுப்புங்கொண்டு மைந்தனைவீட்டைவிட்டு வெளியேறும்படி செய்கின்ருனே அதே போன்றே அல்லாஹ்வும் தன்னை வணங்காது எதிர்க்கும் தொழுது கொள்ளாத ஒருவனிடம் நடந்து கொள்கின்ருன் என்பதாகும். ஹஸ்ரத் ஆயிஷா நாயகி (றழி) அவர்களிடம் ஒருவர் வந்து ''தாங்கள் நீண்டகாலம் நாயகம் (ஸல்) அவர்களுடன் வாழ்ந்திருக்கிறீர்கள்; எனவே அவர்களிடம் நீங்கள் மெச்சத்தகுந்த சிறந்த காரியம் என்னவென்று எனக்குக்கூறுங்கள்'' என வேண்டினர். அதற்குப்பதில் கூறும்போது ஆயிஷாநாயகி (றழி) ''நாயகத் திருமேனியிடம் நான் சிறப்பும் பிரியமுமான செய்கை தொழுகையாக இருந்தது'' என்ருர்கள்.

எனவே தொழுகையை உயிருள்ளதும் தத்துவம் நிறைந்துள்ளதுமாகத் தொழுது கொள்ள நாம்முற்படவேண்டும். தினமும் ஐந்துவேளை இமாம்ஜமாஅத்துடன் தொழுது கொள்ள முற்படுவோமாக. திரிகரண சுத்தியுடன் வுழுவும் செய்து (சுத்தம்) நான் என்பதகற்றித் தொழுது கொள்வோமாக. இறைவன் எமது பாவங்களை மன்னித்துக் கருணை புரியவுங் கூடும். ஆமீன். யாறப்பல் ஆலமீன்.

## மனச்சாட்சியின்...

(2-ம்பக்கத்தொடர்ச்சி)

தனைகளையுமே மனதில் தூண்டிவிடுவனவாகஅமைந்திருக்கின்றன. நம்மை அறியாமல் நம் மனத்தில் இவை நிறைய அழுக்கை நிரப்பி விடுகின்றன.

உள்ளம் என்பது இறைவன் உறையும் கோயில். அங்கே அழுக்கு சேர்வதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது. புனிதமான மலர்கள் மட்டுமே அங்கு கொட்டப்படவேண்டும்.

உலகில் உள்ள ஒவ்வொரு விஷயத்திலும் நல்லதும் தீயதும் கலந்தே இருக்கின்றன. நல்லதை ஒதுக்கித் தீயதை கிரகிப்பதோ அல்லது தீயதை ஒதுக்கி நல்லதைக் கிரகிப்...

## வரிவிளம்பரம்

### தேவை

சித்திரவேலை (கொமர்ஷல் ஆட்டிஸ்ட்) பழக ஆர்வமுள்ள இளைஞர்கள் தேவை. தரன் ஆட்ஸ், 72/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 1045

### விற்பனைக்கு

காணி

கட்டுடை வீதியில் பதினேழரைப் பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு ஓ. வையாபுரி, திருக்கேதீச்சரம், மன்னூர். 1046

10 பரப்புக்காணி, வீடு, கிணறு மற்றும் பிரயோசனத்துடன், கோப்பாய் தெற்கு பளம் ரோட்டில் விற்பனைக்குண்டு. விபரம்: பாலசிங்கம், 90, கொழும்புத்துறை ரோட், கொழும்புத்துறை. 1043

## திருமறையை ஓதலறம்

— திமிலைக்கண்ணன் —

முப்பாலுள் நாற்பால் மொழிந்ததிரு வள்ளுவனார்,
எப்பா,வலரினும் மேலானார் — தப்பாதும்
தெய்வப் புலவர் திருமறையை நாள்தோறு
வையத்தோர் ஓதல் அறம்.

## 'ஈழநாடு' பொது அறிவுப் போட்டி-9

சென்ற வாரத்து கேள்விகளுக்குச் சரியான விடைகள்:- 1. இல்லிங்வேர்த். 2. ஹப்புகஸ் கந்தை. 3. ஹவாஞ. 4. மைட் ஸ்தாபனம். 5. சுமார் 15 வருடங்கள். 6. கரூதர்ஸ். 7. படிக்காசுப் புலவர். 8. 4 கோடி 36 லட்சம். 9. சித்தூர் சுப்பிரமணியம்பிள்ளை. 10. மாற்றுமில்லை உரையுமில்லை

### பரிசு பெறுபவர்

இம்முறையும் ஒரே ஒரு நேயர் முற்றிலும் சரியான விடை அனுப்பி முதலாவது பரிசான பத்து ரூபாயைத் தட்டிக்கொண்டுபோய்விட்டார். இரண்டாவதுபரிசான ஐந்து ரூபாய்க்கு தகுதியானவிடை எதுவுமே கிடைக்கவில்லை. முதற்பரிசு பெறுபவர்:-

செல்வி பி. சசிகலா 23/5, எல்லைவீதி, மட்டக்களப்பு.

### இந்த வாரக்கேள்விகள்

1. 'ஈழநாடு' மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றிபெற்றவர் யார்? 2. எவரெஸ்ற் சிகரத்தின் உயரம் என்ன? 3, 'ஈழநாடு' மர்ம மனிதனை கண்டுபிடித்தவர் யார்? 4. பூமி உருண்டை என்று முதலில் கண்டுபிடித்தவர் யார்? 5. சமீபத்தில் 58-வது பிறந்தநாளைக்கொண்டாடிய இலங்கைப் பிரமுகர் யார்? 6. ஒரு வார்த்தை ஆங்கிலம் தெரியாத ஒரு மன்னன் இங்கிலாந்தை அரசாண்டான். அவன் பெயர் என்ன? 7. மொஸ்கோவில் நடந்த சமீபத்திய கொம்யூனிஸ்ட் மகாநாட்டில் எத்தனை நாடுகள் கலந்துகொண்டன? 8. பிரெஞ்சு ஜனுதிபதியின் பெயர் என்ன? 9. கனடாவின் தலைநகரம் எது? 10. அன்னைக்கு உதவாதவன்.........மிகுதியை நிரப்புக?

## விகடகவிதைப் போட்டி (9)

எங்கள் ஈழநாட்டில் இத்தனை கவிஞர்கள் மிளிர்கிருர்களோ என்று ஆச்சரியப் பட்டது எமது போட்டிக்குழு. ஆஹா! என்ன கற்பனை, எவ்வளவு ஹாஸ்யம்! சொல்வழி கேளாது தன்னிஷ்டமாக திரியும் சிறுவனைப்பற்றி நேயர்கள் அற்புதமான கவிதைகளைத்தீட்டினுர்கள். பரிசுக் கவிதையைத் தேர்ந்தெடுப்பது மகா சிரமமாய்ப் போய்விட்டது.

### பரிசுக்கவிதை

'பள்ளி செல்லும் பாங்குடனே பற்றைசென்று
பற்றி வைப்பான் --
வாயில் ஒரு பீடித்துண்டு
தள்ளிவரும் ஆட்களெல்லாம் தயங்கிப் பார்க்கத்
தள்ளாடியே
வருவான் தண்ணி போட்டு
பல்லினிலே படிப்படியாய் இரத்தம் சொட்டப்
பார்மீது
விழுந்து எழும் கோலத்தோடு
எள்ளி நகையாட வரும் சிறுவன், தம்பி! அவன்
எவர்
சொல்லும் கேளாமல் வளரும் தம்பி!'

### பாராட்டுக்குரியவை

பின்வரும் நேயர்களின் கவிதைப் படைப்புகள் மிகச்சிறந்த பாராட்டுக்குரியன. செல்வி. அனுசூயா செல்வராசா, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம். செல்வி. ராஜேஸ்வரீ துரையப்பா, புங்குடுதீவு. மு. வைத்தியலிங்கம், உரும்பராய். வன்னியூர்க் கவிராயர்' மதவாச்சி. அல்வை. த. சுந்தரன், அல்வை. மா. காந்திமதி, அளவெட்டி.

### அடுத்த போட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யள் இருபது கட்டை ஓடி வந்துவிட்டான்களே, நாகர்.

பொ: பூ, இதென்ன பெரியகாரியம்! நான் நாடகமும் நாட்டியமும் பாக்க வேணுமெண்டு தான் போனேன். ஊ! அதென்ன எண்டு நினைக்கிறாய்! கண்ணெல்லாம் கூசிப்போச்சுது.

நா: நீங்கள் உதைச்சொல்லுறியள். நானும் காலமை எழும்பி அலங்கார பவனியைப் பாக்கப்போனேன். அடேயப்பா! என்ன மாதிரி காட்சியப்பா அது! எத்தினை கார்கள், எத்தினை லொறிகள், எத்தினை சோடனை!

து: அதிலை நீங்கள்விநோத உடைப் போட்டிக்காரரை பாக்கேல்லையே!

நா: ஏன் பாக்கேல்லை, பிச்சைக்காரன், பாரதியார், பறங்கி, வேடன் என்று எத்தினையோ பேர் வந்திருந்தினம்.

பொ: அதாரெடா தம்பி, ஒரு வெள்ளைக்கார உடையோடை வந்து நிண்டவை.

து: அதாரெண்டு எனக்குத் தெரியாது. அவையள் ரண்டுபேரும் சூட்டுகள், தொப்பிகள் சப்பாத்துகளோடை ஒரு ஆம்பிளையும் பொம்பிளையும் நிண்டினம். அவையளை கண்டவுடனை இந்த விழாத்தலைவர் ஒருவருக்கே அடையாளம் தெரியவில்லை. கதிரையைவிட்டு எழும்பி நிண்டு கும்பிட்டார். பிறகுதான் தெரியும் அவையள் விநோத உடைக்காரர் எண்டு.

சு: சூ! உதைச் சொல்லுறாய் தம்பி! நான் 'ஈழநாடு' கந்தோருக்கு முன்னாலை

சு- நாங்கள் என்னடாப்பா உதவி செய்யிறது?

து- பாருங்கோ அண்ணை, யாழ்ப்பாணத்திலை நடக்கிற ஒரே ஒரு தினசரி தமிழ்ப்பத்திரிகை அதுதான். தமிழர் தான் அதை நடத்திக்கொண்டு வரிகினம். அண்டைக்கு மேயர் சொன்னது போலை தமிழருக்குத் தமிழரால் தமிழருக்கென்று நடத்தப்பட்டு வரும் ஒரே ஒரு தமிழ்ப்பத்திரிகை இந்த 'ஈழநாடு' தான். அவை நாங்கள் ஆதரிச்சால்தான் அவங்களும் உற்சாகமாய் விழா நடத்துவான்கள்.

சு:- உவன்தம்பி சொன்னது சரி. எத்தனைபேர் நாங்கள் பேப்பரைக் காசு குடுத்து வாங்கிறமெண்டு சொல்லு!

பொ:- உண்மையண்ணை, உண்மை. எங்கடை நாகலிங்கம் கடையிலை வாறது ஆக அஞ்சு பேப்பர்தான். ஆனால் ஐம்பது பேர் அதை வாசிச்சிட்டுப் போயினம்.

து: காசு குடுத்து பேப்பர் வாங்கிற பழக்கம் எங்களுக்கில்லை.

நான்: பொன்னரே! எங்கடை யாழ்ப்பாணத்திலை இருக்கிற ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு பேப்பர் வாங்கினால் அவன்கள் கிழமைக்கு ஒரு திருவிழா நடத்திப்போட்டு போவான்கள்.

சு: எனக்கு கால் கடுகடுக்குது, நேற்று முழுவதும் நிண்ட நிலைதானே! அதோடை நித்திரையும் வருகுது, போய்ப் படுக்கப் போறன்.

நா: சரி, பிள்ளை போட்டு வா, அண்ணை. உயிரோடை இருந்தால் அடுத்த 'ஈழநாடு' விழாவுக்கும் போவம்.

டப்படவேண்டும்.

உலகில் உள்ள ஒவ்வொரு விஷயத்திலும் நல்லதும் தீயதும் கலந்தே இருக்கின்றன. நல்லதை ஒதுக்கித் தீயதை கிரகிப்பதோ அல்லது தீயதை ஒதுக்கி நல்லதைக் கிரகிப்பதோ நம் மனப்பக்குவத்தைப்பொறுத்தது. சுருங்கக் கூறினால் நாம் நல்லவர்களாவதும் தீயவர்களாவதும் நம் கையிலேயே இருக்கிறது.

டைய பிரம்பை எடுத்து கையில் வைத்துக் கொண்டு காலையில் நடைபெற்றதமது ஒவ்வொரு விவகாரத்தையும் கேட்டுக்கேட்டுக் குறையானவைகளுக்குத் தம்முடைய பிரம்பைக் கொண்டு தமக்கே பலமாக அடித்துக் கொள்வார்கள். நிறைவான நல்ல காரியங்கள் செய்யப்பட்டதாகத் தோன்றினால் மிகவும் குதூகலமாகவும் மகிழ்ச்சியாகவும் இறை

## திருமறையை ஓதலறம்

**—திமிலைக்கண்ணன்—**

முப்பாலுள் நாற்பால் மொழிந்ததிரு வள்ளுவனார்,
எப்பா,வ லரினும் மேலானார் — தப்பாதும்
தெய்வப் புலவர் திருமறையை நாள்தோறு
வையத்தோர் ஓதல் அறம்.
வான்புகழ் தந்த வள்ளுவன் செய்குறளை
நான்மறை போற்போ ற்றிநயந்து -- வான்கபுழ
வாழ்வாங்கு வையத்துவாழ்தலறம்; உலகில்த்
தாழ்வகற்றும் பொய்யா மொழி

## அவளுக்காய் அழிவேன்

**—சிந்தனைச் செல்வன்—**

கண்ணெதிரே தோன்றியெனை மயங்க வைத்து
கதையளப்பாள் கண்ணீரில் மிதந்து நிற்பாள்
மண்ணினிலே என்னுடனே உயிரே யாகி
மாண்புடனே வாழ அவள் எண்ணிவிட்டால்
பொன்னெதற்கோ பொருளெதற்கு அவளே வாழ்வு
பொல்லாதார் சொல்லெதுவும் கொள்ள மாட்டேன்
என்னதான் இந்நிலத்தில் எதிர்வந்தாலும்
எந்நாளும் அவளுக்காய் அழிவேன் நானே!

அன்புடனே என்னோடு பழகி என்றன்
ஆருயிரிற் கலந் தென்னைக் கலங்க வைத்தாள்
என்னுடனே ஒன்றாகி இணைந்துவிட்டாள்
ஏழைதான் என்றாலும் மறக்க மாட்டேன்
என்னதான் ஊரார்கள் உரைத்திட்டாலும்
என்னவளை என்றும் நான் எனதே ஆக்கி
உன்மத்த மான இவ் உலகம் தன்னில்
உறவாடி உயிர் வாழ நினைவுற்றேனே!

என் வாழ்வில் ஒரு நாள்—(14)

# என்னிடம் எக்கச்சக்கமாக அகப்படாதீர்கள்!

**சொன்னது: கரடி**

**எழுதியது: வி. என். பி.**

**நான்** ஓர் அதிசயப் பிராணி ஐயா. என்னைப் போல உடம்பெல்லாம் உரோமமும், கூரான மூஞ்சியும், ஆறு அங்குல நீளத்தில் நகங்களுமுள்ள வேறு பிராணிகளை நீங்கள் காண்பது அபூர்வம். அத்துடன் மரங்களில் ஏறுவேன், இரண்டு கால்களில் நடப்பேன், நீந்துவேன்.

வேறுசில காட்டுமிருகங்களைப்போல நான் உங்களுக்கு அதிகம் தொந்தரவு கொடுப்பதில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். உங்கள் கமங்களை அழிக்க மாட்டேன். உங்கள் குடிமனைகளுக்குள் புகுந்து அட்டகாசம் செய்யமாட்டேன். சிவனே என்று பேசாமல் வாழ்ந்து விடுவேன்.

ஆனால் நீங்கள்தான் சில சமயம் எக்கச்சக்கமாக என்னிடம் வந்து அகப்பட்டுக் கொள்வதுண்டு. நான் வசிக்கின்ற அடர்ந்த காட்டுக்குள் வரவேண்டிய அவசியமில்லை. ஆயினும் விறகு வெட்டுவதற்கோ தேன் சேகரிப்பதற்கோ நீங்கள் என்னுடைய பிரதேசத்திற்குள் அத்துமீறி பிரவேசிக்கும்போதுதான் எமக்கிடையில் கைகலப்பு ஏற்பட்டு விடுகிறது. அதற்கு நான் பொறுப்பாளியல்ல. மற்ற மிருகங்களைப்போல நானும் உங்களைக் கண்டவுடன் பயந்து ஒதுங்கிவிடத்தான் பார்ப்பேன். ஆனால் நீங்கள் மிகவும் கிட்ட நெருங்கி விட்டால் எனக்கு ஏதோ ஆபத்து வரப்போகின்றதென்ற பயத்தினால் எனக்கு ஒருவிதமான தைரியம் உண்டாகிவிடுகின்றது. உடனே உங்களைத் தாக்குவதற்கு முவலுவேன்.

என்னிடம் அகப்பட்டவர்களில் எவரையாவது கேட்டுப்பாருங்கள் தெரியும். யானையைப்போல் தும்பிக்கையால் அடித்து முன்னங்காலால் துவைக்க மாட்டேன். சிங்கம் புலிகளைப் போலப் பாய்ந்து கடிக்க மாட்டேன். எருமை, மரைகளைப்போலக் கொம்புகளால் குத்த மாட்டேன். ஆனால் எனது வலிமை என்னுடைய பிடியின் இறுக்கத்திலும், நகங்களின் கூர்மையிலும்தான் தங்கியிருக்கிறது. என்னிடம் அகப்பட்டுக்கொள்வீர்களானால் தப்பிப்போவது அபூர்வம். நகங்களால் உங்களைக் கிழித்தெறிந்து விடுவேன். சில சமயம் உங்கள் கண்களையும் பிடுங்கித் தோண்டி விடுவேன்.

என்னை நீங்கள் அடித்துக் கொல்வதோ, துப்பாக்கியால் சுட்டுக் கொல்வதோ மிகவும் கடினமான விஷயம். என்னுடைய அடர்ந்து நீண்ட உரோமம் எந்த விதமான பலமான அடியையும் மெத்தைபோல தாங்கிக்கொள்ளும். துப்பாக்கிகளின் சன்னங்களும் இலேசில் அந்த உரோமத்தைத் துளைத்து என் உடம்பைத் தாக்க மாட்டா. எனது கூர்மையான மூஞ்சி அல்லது செவிகளுக்கு இலக்கு வைத்தாற்தான் என்னைக்கொல்ல முடியும்.

ஆயினும் நீங்கள் ஏன் என்னைக் கொல்லவேண்டும்? என்னால் உங்களுக்கு ஒரு வித பலனுமில்லை. என் மாமிசத்தை நீங்கள் உண்பதில்லை. தோலை உபயோகிப்பதில்லை. என்னால் உங்களுக்குத் தொந்தரவுமில்லை. மற்றமிருகங்கள்கூட என்னை அதிகம் நெருங்குவதுமில்லை, நானும் அவற்றிற்கு இடையூறு செய்வதில்லை.

எனக்குப் பழம் சாப்பிடுவதில் அதிகம் பிரியம். இந்த வினையினால்தான் சில சமயம் நான் உங்களிடம் அகப்படுவதுண்டு. இலந்தைப் பழம் பாலைப்பழம் என்றால்எனக்கு அலாதியான ஆசை. பாலைப் பழம் பழுத்த காலங்களில் நாங்களும் பன்றிகளும் போட்டி போட்டுக்கொண்டு சாப்பிடுவோம். அந்தச் சமயங்களில் நீங்கள் எங்களை அணுகாமலிருப்பது தான் புத்தி.

இன்னொரு விஷயத்தை என்னால்மறக்கவேமுடியாது. தேனீக்கள் எங்கே வதை வைத்தாலும் அந்த வாசனை என்னுடைய மூக்கைத் துளைத்துவிடுகிறது. என்னதான் ஆபத்து வந்தாலும் நேரே அந்தத் தேன்கூட்டுக்குப் போய்விடுவேன். தேன்கூடு மரப்பொந்தில் இருந்தாலென்ன, கற்பாறையில் தொங்கிக்கொண்டிருந்தாலென்ன, மரக்கிளைகளில் இருந்தாலென்ன, எப்படியாவது சாப்பிட்டு விட வேண்டும் என்ற ஒரேநோக்கத்துடன் நேரேபோய்க் கையை வைத்துவிடுவேன். தேனீக்கள் குட்டாமலிருக்குமா, குட்டும்தான். ஆனால் இங்கும் எனது அடர்ந்து நீண்ட மயிர் என்னைக் காப்பாற்றிக்கொள்ளும். என்னுடைய திறந்த மூஞ்சியில் மட்டும் தேனீக்கள் குட்டாதவாறு ஒருவகையில் தப்பித்துக்கொள்ளப் பார்ப்பேன். அப்படியிருந்தும் சில தேனீக்கள் எனது மூஞ்சிக்குள்ளும் காதுகளுக்குள்ளும் புகுந்து குட்டு குட்டு என்று குட்டிவிடும். நான் அதை பரவாய்படுத்தமாட்டேன். எனது இரண்டு கை நிறையும் தேன் வதைகள் இருக்கின்றனவல்லவா? அப்படியே அவற்றை வாயில்போட்டுச் சப்பித் தின்றுவிடுவேன்.

என்னுடைய பெரிய அண்ணன் ஒருவன் இருக்கிறான், உங்களுக்குத் தெரியுமா? அவனை நீங்கள் கண்டிருக்க முடியாது. ஏனென்றால் அவன் வடதுருவ சமுத்திரப்பகுதியில் மட்டுமே வாழ்கிறான். அவன் என்னைவிட எத்தனையோமடங்கு பெரியவன். எடை கிட்டத்தட்ட 1600 றாத்தலுக்குமேலிருக்கும். என்னைப்போலவே அவனும் நீந்துவான். அந்தப்பிரதேசத்திலுள்ள பனிக்கட்டிகள்மீது அவன் மிகச் சுலபமாக மணிக்கு 25மைல் வேகத்தில் ஓடுவான். அவனுடைய முன்னங்காலில் உள்ள வலிமை பொல்லாதது. ஒரே அடியில் 500 றாத்தல் மிருகங்களை சுலபமாகக்கொன்று விடுவான். அவனுக்கும் எனக்கும் ஒரே ஒரு வேற்றுமை. அவன் உங்களைக் கண்டால் அடித்துத் தின்று விடப்பார்ப்பான். ஆகையினால் மிகவும் ஜாக்கிரதையாயிருங்கள்.

இரண்டு பிராணிகளுக்குத்தான் அவன்பயப்படுவான். ஒன்று திமிங்கிலம், மற்றது கடற்குதிரை. திமிங்கிலம் அவனை வாலால் அடித்துக் கொன்றுவிழுங்கி விடும். கடற்குதிரை தன் தந்தங்களால் அவனைக் கீறிக்கிழித்து விடும்.

அதோ என்னுடைய சம்சாரம் மூன்று குட்டிகளுடன் தாண்டித்தாண்டிவருகிறாள். அவளுடன் புழங்குவது அபாயம். ஆகையால் நீங்கள் மறைந்துவிடுங்கள்.

சூயா செல்வராசா, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம். செல்வி. ராஜேஸ்வரி துரையப்பா, புங்குடுதீவு. மு. வைத்தியலிங்கம், உரும்பராய். வன்னியூர்க் கவிராயர்' மதவாச்சி. அல்வை. த. சுந்தரன், அல்வை. மா. காந்திமதி, அளவெட்டி.

## அடுத்த போட்டி

கூலிக்குமாரடிக்கும்மேடைப்பேச்சாளரைப்பற்றி ஐந்து வரிக்கு மேற்படாத சுவையான ஒரு விகட கவிதைஎழுதுங்கள், பார்ப்போம்.

### நிபந்தனைகள்

ஒவ்வொரு போட்டிக்குரிய விடையும் அதற்குரிய கூப்பனுடன் இணைத்து அனுப்பப்படவேண்டும். விடைகள் 26-6-69க்கு முன் பொது அறிவுப் போட்டி (9), 'ஈழநாடு', த. பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு வந்து சேர வேண்டும். ஒருவர் எத்தனை விடைகளையும் ஒரே உறையில் போட்டு அனுப்பலாம். ஆனால் ஒவ்வொன்றுடனும் கூப்பன் இருக்கவேண்டும். போட்டிக்குழுவின் தீர்ப்பே முடிவானது.

கூப்பன்

'ஈழநாடு' விகடகவிதைப் போட்டி-(9)

பெயர்.............................................

விலாசம்.............................................

.............................................

திகதி ........................

கூப்பன்

'ஈழநாடு' பொது அறிவுப்போட்டி-(9)

பெயர்.............................................

விலாசம்.............................................

.............................................

திகதி..................


## ஆடவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்!

விற்று முடிப்பதற்காக கொள்விலையிலும் பார்க்கக் குறைக்கப்பட்டுள்ளது

| | வ. வி. | ம. வி. |
| --- | --- | --- |
| 'டிப்ளோமற் ரெற்றேன் கொட்டன்சேட் | 22 - 50 | 16 - 50 |
| டிப்ளோமற் நைலோன்(லக்ஸறிசேட்) | 29 - 00 | 20 - 00 |
| ஸோடியக் நைலோன் புஸ் சேட் | 20 - 00 | 14 - 00 |
| ஸ்கைவே டெரலின் சேட் | 24 - 50 | 17 - 00 |
| டியூரோ டெரலின் சேட் | 29 - 00 | 20 - 00 |
| மோட்டெக்ஸ் டெரலின் சேட் | 24 - 00 | 15 - 00 |
| டியூரோ நைலோன் சேட்(ஸ்ரைப்) | 29 - 50 | 26 - 00 |

மற்றும் சகலவிதமான சேட்டுவகைகளின் விலைகள் மிக மிகக் குறைக்கப்பட்டுள்ளன. விரையுங்கள்.

**பொகுமால்ஸ்**

49, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் — அரசியல் நிருபர்

# சிங்களத் திரைப்பட வளர்ச்சிக்கு மட்டும்தான் அரசாங்க உதவியா?

## ஒரு விஷயத்தில் நெப்போலியனை பின்பற்றும் அமைச்சர் இரியகொல்ல

"உங்கள்பிள்ளையைப் பற்றி எல்லோரும் ஏதாவது திட்டிக்கொண்டேயிருக்கிறார்களே" என்று நெப்போலியனின் தாயாரிடம் ஒரு சமயம் யாரோ கேட்டதற்கு "அதனால் பரவாயில்லை, அவனைப்பற்றி நல்லதோ, கெட்டதோ ஏதாவது சொல்லிக்கொண்டிருந்தால் போதும். அவன் பெயரை மக்கள் மறந்துவிடக்கூடாது" என்று பதிலளித்தாராம்.

நமது மதிப்புக்குரிய கல்வி அமைச்சர் ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லையின் தாயாரிடம் கேட்டிருந்தால் என்ன சொல்லியிருப்பாரோ தெரியவில்லை. ஆனால் நெப்போலியனின் தாயார் சொன்ன கருத்தை மனதில்கொண்டுதான் திரு. இரியகொல்ல நடந்துகொள்கிறார் என்று நம்புவதற்கு இடமுண்டு.

எப்போதுமே எந்த இடத்திலுமே ஏதாவது சொல்லி அதன் மூலம் சர்ச்சையைக் கிளப்பித் தனது பெயர் அடிபட்டுக்கொண்டிருக்கச் செய்வதில் திரு. இரியகொல்ல வல்லவர். சம்பந்தா சம்பந்தமில்லாமல் பேசுவதிலும் அவர் சமத்தர். கல்வி அமைச்சராகப் பதவியேற்ற நாளிலிருந்து கல்வித்துறையில் முன்னேற்றம் கண்டாரோ இல்லையோ எந்த நேரமும் பத்திரிகைகளிலும் ஆசிரியர், மாணவர், ஆட்சி மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் மத்தியில் அவரது பெயர் அடிபட்டுக்கொண்டிருக்கச்செய்வதில் வெற்றிகண்டுள்ளார். கடைசியாக அவர் செய்திருக்கும் சாதனை, அநுராதபுரத்தில பௌத்த பல்கலைக்கழகத் திறப்பு விழாவில் புத்த பிக்குகள் பற்றி எதையோ சொல்லி, பிக்குகளின் எதிர்ப்பைத்தேடிக்கொண்டிருப்பது. பிரதமருக்கு அதிக தலையிடியைக் கொடுக்கும் அமைச்சரும் திரு. இரியகொல்லதான். ஆனாலும் 'புலியின் வாலைப் பிடித்தவன்' நிலைதான் பிரதமருக்கு.

### தேர்தலும் மொழியும்

தேர்தல் காலம் நெருங்க நெருங்க தேர்தலில் வெற்றியீட்டுவதற்கு என்னென்ன தந்திரங்களைக் கையாளலாம் என்பதில் அரசியல்வாதிகளும் அரசியல் நிறுவனங்களும் திட்டமிடத் தொடங்கிவிட்டன. ஆட்சி பீடத்திற்கு வருவதற்கு யார் யாரின் உதவியையும் தயவையும் நாடலாம் என்பதில் எதிர்க்கட்சியினர் மட்டுமல்ல ஆளும் கட்சியினரும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். தி. மு. க., நாம் தமிழர் இயக்கம் என்ற பிரசாரம் மலையகத்தின் சில பகுதிகளில் சில மோசமான நிலையைத் தோற்றுவித்திருப்பினும் தி. மு. க. நாம் தமிழர் இயக்க பிரசாரம் தமிழ் வாக்குகளை கெடுத்து விடுமென்பதை எதிர்க்கட்சியினரும் ஆளும் கட்சியினரும் உணர்ந்து கொண்டனர். சிங்கள திரைப்பட வளர்ச்சிக்கோரிக்கை தமிழ்படத் துவேஷமாக மாறி தமிழ்த்துவேஷமாக உருவெடுத்துள்ளது. சிங்களத் திரைப்படவளர்ச்சிக்கு ஏதாவது செய்தாலொழியவேறு வழியில்லையென்பதை அரசாங்கம் உணர்ந்து சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றனர். சிங்களத்திரைப்பட வளர்ச்சிக்கு அரசாங்கம் உதவிசெய்வதில் ஆட்சேபனையில்லை. சிங்களத் திரைப்படவளர்ச்சிக்காக தமிழ்த் திரைப்படங்களின் இறக்குமதியைத் தடைசெய்யவும், கட்டுப்படுத்தவும் எடுக்கும் நடவடிக்கைகள் தான் புரிந்துகொள்ள முடியாமலிருக்கிறது. சிங்களத் திரைப்படத்தொழிலை அரசாங்கம் ஒரு கைத்தொழிலாக அங்கீகரிக்கவிருப்பதுடன் கச்சாப் பிலிம் இறக்குமதித் தீர்வையை குறைகவும், இந்தியத் திரைப்படங்களின் இறக்குமதிமீது கட்டுப்பாடு விதிக்கவும், திரைப்படத் தொழில் நுட்ப சாதனங்களைத் தீர்வையில்லாமல் இறக்குமதி செய்யவும் அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக தகவல் ஒலிபரப்பு அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.



இலங்கைத் திரைப்பட வளர்ச்சியென்று அமைச்சரோ வேறுயாருமோ சொல்லவில்லை. சிங்களத்திரைப் படத்தொழில் வளர்ச்சி என்றுதான் சொல்கிறார்கள். எனவே சிங்களத் திரைப்பட வளர்ச்சிக்கு வழங்கும் உதவியும் ஆதரவும் ஒத்துழைப்பும் இங்கு தமிழ்த் திரைப்பட உற்பத்திக்கும் வளர்ச்சிக்கும் அரசாங்கம் வழங்குமா என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது.

தமிழ்த் திரைப்படங்களை இங்கு தயாரிக்கவும் இங்குள்ள கலைஞர்களின் திறமையைப் பயன்படுத்தவும் அரசாங்கம் உதவியளிக்குமா? தமிழ்த்திரைப்படத்தயாரிப்புக்கு இங்கு ஊக்கமோ உதவியோ அளிக்காமல், தமிழ்த்திரைப் படங்களின் இறக்குமதியைத் தடை செய்வது, அல்லது கட்டுப்படுத்துவது நியாயமாகுமா? இதன் அர்த்தம் என்ன'

இலங்கையில் திரைப்பட உற்பத்திக்கும்வளர்ச்சிக்கும் உதவியும் ஊக்கமும் அளிக்க முன்வந்து வெளிநாட்டுத் திரைப்படங்களின் இறக்குமதிக்கு அவை எந்தமொழிப் படங்களாகவிருப்பினும் கட்டுப்பாடு விதித்தால் அதில் அர்த்தமுமுண்டு, நியாயமுமுண்டு. எந்தச் சமூகத்துக்கும், எந்த இனத்துக்கும் பாகுபாடு காட்டுவதில்லையென்றும் தேசிய ஐக்கியமே தமது இலட்சியமென்றும் கூறும்பிரதமர் இதுபற்றியும் சிந்திக்கவேண்டும். இதைப் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டுவருவது கலைஞர்களினதும் ஆட்சிமன்றப்பிரதிநிதிகளினதும் கடமையும் பொறுப்புமாகும்.

தமிழ்ப்படங்களின் இறக்குமதியைத் தடைசெய்ய வேண்டுமென்று சில அமைச்சர்களே பொதுமேடைகளில் பகிரங்கமாகக்கூறுவதையும் பிரதமர் உடனடியாகக் கட்டுப்படுத்தவேண்டும்.

### இஸ்ரேல்-அரபு-தேர்தல்

இங்குள்ள முஸ்லிம்களின் ஆதரவைப் பெறுவதற்கு எதிர்க்கட்சியினரும் ஆளும் கட்சியினரும் தீவிர முயற்சி செய்துவருகின்றனர். பிரதமர் திரு. டட்லி சேனநாயகா சமீபத்தில் ஐக்கிய அரபுக்குடியரசுக்குச்சென்று வந்ததும் அங்கு அதிபர் நாஸருடன்பேச்சுவார்த்தை நடத்தியதும் இங்கு எதிர்க்கட்சியினருக்கு சிறிது தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதைச் சரியாகப் பயன்படுத்த பிரதமரும் ஆளும் கட்சியினரும்முன்வந்துள்ளனர். இஸ்லாமிய சோஷலிஸ முன்னணித் தலைவர் அல்ஹாஜ் பதியுதீன் மாமூத்துக்கும் உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யூ தகநாயகாவுக்குமிடையில் முஸ்லிம்களுக்கு அதிகஉதவியளித்ததுயார், எந்த அரசாங்கம் இதற்கு யார் காரணம் என்பது சம்பந்தமாக எழுந்த சர்ச்சை பிரதமரையும் அதில் சேர்த்துஇழுத்து, பதியுதீன் தம்மைப்பற்றி (பிரதமர்) பேசுவதை நிறுத்திக்கொள்ளாவிட்டால் அவரைப் பற்றிய (பதியுதீனை அந்தரங்க விஷயங்களை அம்பலத்துக்குக்கொண்டுவரப்போவதாகப் பிரதமரே மிரட்டியிருக்கிறார். சர்ச்சை நீடித்தால் வேடிக்கையான விஷயங்கள் வெளிவரலாம்.

தேர்தல் காலம் நெருங்கும்போது பல உண்மைகளும், உணமையல்லாதவைகளும் வெளிவரும்.

---

## 'சந்திரன் உங்கள் கையிலகப்படாது'

### விஞ்ஞானிகளை எச்சரிக்கிறார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நீங்கள் அண்மித்துவிட்டதாகக் கூறும் சந்திரன் உங்கள் கையிலகப்படாது எப்பொழுதும் தூரவேகாட்சியளிக்கும் என்று புலோலி கிழக்கைச்சேர்ந்த திரு. சு. க. பசுபதி வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் கூறியுள்ளார்.

விண்வெளியில் வெண்மதியைத் தாவும் விஞ்ஞானிகளுக்கு ஓர் எச்சரிக்கைஎன்ற தலைப்பில் திரு. பசுபதிவெளியிட்டிருக்கும் துண்டுப்பிரசுரத்தில் கூறப்பட்டிருப்பதாவது:

சந்திரன் ஒரு பிரதிதோற்றமேயன்றி அது ஒரு சடப்பொருளல்ல, கண்ணாடியில் பிரதிபிம்பிக்கும் நிழலைப் போன்றது. பூதாக்கினியின் இரண்டாவது பிரதிதோற்றமே சந்திரன் என்று உங்களாற் காணப்படுகிறது. இமைப்பொழுதில் பூமியை ஊடுருவி வருகின்ற பூதாக்கினி பூதவெளி என்ற கண்ணாடியின் மத்தியில் சூரியனாகத் தோற்றி அச்சூரியன் ஒளியானது சென்று நீல மேகத்திற் படுகின்றபோது பிரதிபிம்பிக்கும் ஒளியே சந்திரனாகும்.

கானல்நீர் போன்ற இத்தோற்றத்தை எவ்வாறு முயன்றாலும்கைப்பற்றவோ அன்றி இதன் மேல் கால் வைக்கவோ முடியாது என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பூதவெளியென்ற ஒழுங்கற்றகண்ணாடியின் மூலமாக வெவ்வேறு இடைவெளித் தோற்றத்தில் சந்திரனைக் காணமுடியுமே ஒழிய, அதை அடைந்துவிட முடியாது என்ற உண்மையை முதன் முதலாக இவ்வுலகிற்கறிமுகஞ்செய்து வைக்கிறேன்.

### கார்-வான் மோதல்

பருத்தித்துறை, சனி

நெல்லியடியைச் சேர்ந்த ஒரு காரும், ஒரு வானும் சிறுப்பிட்டியில் மோதிக் கொண்டதன் விளைவாக காருக்கு அதிக சேதம் ஏற்பட்டது. வானிலிருந்த சில பிரயாணிகளுக்குச் சொற்ப காயம் ஏற்பட்டது.

வல்வெட்டித்துறை
ரஞ்சனா தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை 10-30
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)

இன்றுமட்டும்
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45.
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்கு அரைக்கட்டணம்

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
ரவிச்சந்திரன் — ஜெயலலிதா
நடித்த
நான்
(ஈஸ்ட்மென் கலர்)

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Pre-Poya, Poya 4 Shows
James Coburn, Jean Hale
in
IN LIKE FLINT
(Cinemascope Color)

MANOHARA
JAFFNA
Daily 4 Shows
YUL BRYNNER as the
Double Man
The Best Thriller - 1968

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
ஜெய்சங்கர்
வரலக்ஷ்மி
நடித்த
உயிரா மானமா

---

## "மேசையின் கீழிருந்தவரை வாளால் வெட்டிக் கொன்றனர்"

### கிராம சேவையாளர் சாட்சியம்

காலி, சனி

"எனது வீட்டிலுள்ள மேசையொன்றின்கீழ் இறந் ...

வழக்கொன்றில் இகலகீம்பியா கிராமசேவையாளர் திரு. ஏ. கே. ஜாலத்மேற் ...

## சமாதான நீதவான் மறைவு

அண்மையில்சமாதானநீத ...

## போலித் தங்க மோசடிவழக்கு

வல்வெட்டித்துறை, சனி

சுப்பையா பழனிவேல், காளிமுத்து ... இருவரும் ... சேர்ந்த கே. பூரணசிங்கப் என்பவரிடம் 290 போலிச் ...

## 'புதிய கட்சியை ஏன் ஆரம்பிக்கிறேன்'

### தீவுப்பகுதி எம். பி. விளக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராம சேவையாளர் சாட்சியம்

காலி, சனி

"எனது வீட்டிலுள்ள மேசையொன்றின்கீழ் இறந்தவர் பயத்திஞல் ஒழித்திருந்தார். மூன்று எதிரிகளும் எனது வீட்டிற்குள் அத்துமீறிப் பிரவேசித்து இறந்தவரை மேசையின் கீழிருந்து இழுத்து வாளால் வெட்டிக் கொன்ருர்கள். என்னையும் பயமுறுத்திஞர்கள்"

அண்மையில் காலிஅசைஸ் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. கிறெட்ஸர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்ட கொலை வழக்கொன்றில் இகலகீம்பியா கிராமசேவையாளர் திரு. ஏ. கே. ஜாலத்மேற் கண்டவாறு சாட்சியமளித்தார்.

இவ்வழக்கில் ரி. வி. சந்திரதாச என்பவரை அவரது மூத்தசகோதரரான ரி. வி. அமரதாசாவும், என். ஜி. ருேமியல் அல்லது சோமதாசா, பி. ஜி. உபதிச ஆகியோர் 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் பிரஸ்தாப கிராமசேவையாளர்வீட்டில் வைத்துக்கொலை செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

'பாடசாலைகளில்

## விஞ்ஞான உபகரணங்களுக்கு பெற்ருேர் உதவவேண்டும்'

இமையாணன், சனி

விஞ்ஞானக் கல்வியைச் செய்கைமுறைமூலம் கற்பதற்குப் போதியளவு உபகரணங்கள் முந்திய காலங்களில் பல பாடசாலைகளுக்கு இருக்கவில்லை. இதஞல் அநேக மாணவர்கள் விஞ்ஞானக்கல்வியில் போதியளவு ஊக்கம் செலுத்தவில்லை. ஆகவே இப்படியான உபகரணங்களைப் பெறுவதற்குப் பெற்ருேர்கள் உதவி செய்தால் அரசாங்கமும் அதற்கு உதவி செய்யும்.

இவ்வாறு உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நேற்று ஆரம்பமான பொருட்காட்சியை ஆரம்பித்து வைத்துப் பேசும்போது கல்வி ஆலேசாகரான திரு. ஆர். திருநாவுக்கரசு கூறிஞர்.

கல்லூரி அதிபர் செல்விமான் தலைமையில் நடைபெற்ல இக் கண்காட்சியில் அவர் மேலும் கூறியதாவது-

பொருங்காட்சிகள் மூலம் கல்வியை மாணவர்கள் நேரடியாகவும் சுலபமாகவும் கிரகிக்கலாம். ஒவ்வொரு பாடசாலைகளிலும் இப்படியான பொருட் காட்சிகள் வைப்பது மாணவர்களுக்குக் கல்வியில் ஊக்கமூட்டும்."

இக்கண் காட்சியில் கலை, விஞ்ஞானம் கைப்பணி, சித்திரம் உட்படப் பல தரப்பட்ட பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.


### விற்பனைக்கு

காணி

புன்னலைக்கட்டுவன் - சுன்ஞகம் பிரதானவீதியிலிருந்து 200 யார் தூரத்தில் நிலம் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு த. செல்வராசா, 2, கச்சேரி லேன், யாழ்ப்பாணம், 1201



### மரண அறிவித்தல்
திருமதி சூசன் ஞானப்பிரகாசம்

ஊர்காவற்றுறை காம் ருேட்டைச் சேர்ந்த முருகர் ஞானப்பிரகாசத்தின் அன்பு மனைவி திருமதி சூசன் காலமாகிவிட்டார். அன்னரின் பூதவுடல் இன்று (22-6-69) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் புனித தேவமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்; மு. ஞா. அமிர்தம்

1617



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஜூன் மாதம் 22ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


## நீதவான் மறைவு

அண்மையில்சமாதான நீதவாஞக பதவியேற்றுக் கொண்ட கொடிகாமத்தைச் சேர்ந்த திரு. பேரம்பலம் செல்லையா நேற்று முன்தினம் காலமாகிவிட்டார்.

தபால் இலாகாவில்சுமார் 32 ஆண்டுகள் சிரிய பணியாற்றிய திரு. செல்லையா சமய, சமுதாயகல்வித்துறைகளில் ஆற்றிய தொண்டு அளப்பரியது. கொடிகாமம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை இவரது நினைவுச் சின்னமாய் என்றும் நிலைத்து நிற்கும் திரு. செல்லையாவிஞல் 1960-ம் ஆண்டுதாபிக்கப்பட்ட இக் கல்லூரியை அரசாங்கம்பின்னர்பொறுப்பேற்றுக் கொண்டது. இவரது மறைவுச் செய்திகேட்டு இப் பாடசாலை தனது அஞ்சலியை தெரிவித்துக் கொள்ளுமுகமாக நேற்று முன்தினம் மூடப்பட்டது. பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி பக்திப்பாடல்கள் பாடிஞர்கள்.

நீதி அமைச்சர் நியமித்த கச்சாய் நட்புறவுச் சபையின் தலைவராகவும் கொடிகாமம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும் பணியாற்றிய இவரது சமுதாயப் பணிகள் இன்னும் தேவைப்படுகின்ற இச் சமயத்தில் இவர் காலனின் கைப்பட்டது மனவருத்தத்திற்குரியது.

அன்னரின் பூதவுடல் நேற்று முன்தினம் தகனம் செய்யப்பட்டது.

வல்வெட்டித்துறை, சனி

சுப்பையா பழனிவேல், காளிமுத்து நடராசா ஆகிய இருவரும் சுழிபுரத்தைச் சேர்ந்த கே. பூரணசிங்கம் என்பவரிடம் 290 போலித் தங்கத் தகட்டுத் துண்டுகளைக் கொடுத்து ரூபா 1600 மோசடி செய்ததாக யாழ்ப்பாணம் குற்றத் தடுப்பு பொலிசாரால் குற்றம்சாட்டிப் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டபோது மாஜிஸ்திரேட் முதலாம் எதிரியை ரூபா 1500 பிணையிலும் இரண்டாம் எதிரியை ரூபா 1000 பிணையிலும் செல்ல உத்தரவிட்டு வழக்கை அடுத்த மாதம் 26-ந் திகதி விசாரணைக்காக ஒத்தி வைத்துள்ளார்,

## இந்திய ஜனதிபதி தேர்தல்

புதுடில்லி, ஜூன் 20

இந்திய ஜனதிபதித் தேர்தல் ஆகஸ்ட் 16ல் நடைபெறும் என்று தலைமைத் தேர்தல் கமிஷனர் இன்று தெரிவித்தார். டாக்டர் சாகிர் ஹுசேனின் மரணத்தைத் தொடர்ந்து ஜனதிபதிப் பதவி தெற்றிடமானது.

## ஆனி உத்தர விழா

வல்வெட்டித்துறை, ஞா.

தொண்டமாஞறு செல்வச்சந்நிதி கோவில் ஆனி உத்தர திருவிழா இன்று நடைபெறவிருக்கிறது.

இன்று பகல் 1 மணியளவில் விசேஷ பூசை நடைபெறும். சுவாமி வெள்ளி மயிலில் வீதிவலம் வருவார்.

## 'சகல துறைகளிலும் பெண்கள் திறமை பெறவேண்டும்'

பருத்தித்துறை, சனி

"பெண்களுக்குத் தேவையான இசை, நடனம், மனையியல் ஆகிய பல கலைகளையும் தொடர்ந்து பொதுமக்களின் உதவியுடன் போதிப்பதிலும் பார்க்க, அரசாங்கத்திடம் வருடாந்த மான்யம் பெற்று நடாத்துவதால் ஒரு பாதுகாப்பு உணர்ச்சியும், நிரந்தரத்தன்மையும் ஏற்படும்."

இவ்வாறு வடமராட்சி மாதர் கலாமன்றப் பத்தாவது ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசிய திருமதி எம். இராசநாயகம் குறிப்பிட்டார். தொடர்ந்து பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:-

"ஒரு பெண் வாழ்க்கைக்குத் தன்னைத் தகுதியாக்குவதற்கு வேண்டிய சகல துறைகளிலும் திறமைபெற வேண்டும். அதே நேரத்தில் நாட்டின் கலாசாரத்தை பின்னணியாகக் கொண்டு, 'ஒரு நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்' என்ற அடிப்படையில் வாழ்வை உருவாக்கப் பழகிக்கொள்ளவேண்டும். சமயப்பற்றும் தேசாபிமானமும் நிறைந்த ஒரு சந்ததியை வளர்க்க உதவ வேண்டும்."

பாலர் வகுப்புகளில் திறமைவாய்ந்த மாணவ, மாணவியருக்கு திருமதி. இராசநாயகம் பரிசு வழங்கிஞர் திருமதி. எஸ். பத்மநாதனின் இசைக் கச்சேரியும் இடம் பெற்றது.

## ஏன் ஆரம்பிக்கிறேன்'
## தீவுப்பகுதி எம்.பி. விளக்கம்

அல்லைப்பிட்டி, சனி

"தமிழினம் இன்னும்தன் மானத்துடன் இருக்கின்றதா இன்றேல் அடிமைகளாக சலுகைகட்கு விற்கப்படும் இனமாக மாறிவிட்டதா? என்பதைத் தென்னிலங்கை அரசியல்வாதிகட்கு எதிர்வரும் பொதுத் தேர்தல் மூலம் இலங்கைத் தமிழ்மக்கள் சார்பில் எடுத்துக்காட்டும் பொறுப்பு ஊர்காவற்றுறைத் தொகுதி மக்களுக்கே உரியதாக இருக்கின்றது."

இவ்வாறு வியாழக்கிழமை அல்லைபிட்டியில் நடைபெற்ற புதியகட்சி ஆலோசனைக்கூட்டத்தில் ஊர்காவற்றுறை எம். பி. திரு.வ. நவரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்திற்கு அல்லைப்பிட்டிக்கிராமசபைத் தலைவர் திரு. செ. தவவிஞயகம் தலைமை தாங்கிஞர்.

திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது-

இரண்டு தமிழ்க்கட்சிகளையும் தமிழ்இனம் இனிமேலும் நம்பி இருக்க முடியாது. இன்று ஒரு தமிழ்க் கட்சி அரசாங்கத்தில் அங்கம் வகித்துக் கொண்டிருக்கிறது. மற்றது தமிழ்மக்களைத் தேர்தலுக்காக ஏமாற்றுவதற்கு அரசாங்கத்தை விட்டு வெளியே வந்துள்ளது இதுதான் இரண்டு கட்சிகளுக்கும் உள்ள வித்தியாசம் என்று கூறலாம்.

தமிழரசுக்கட்சியில் புதிதாக நுழைந்த சிலரின் சூழ்ச்சியால் கட்சியைத் திருத்தமுடியாதநிலை ஏற்பட்டது. இதஞல்தான் நான் தமிழ் இனத்தின் சார்பிலும் தமிழரசுக்கட்சியின் கொள்கைப்படியும் நாம் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளின் படியும் பாராளுமன்றத்தில் தமிழினத்திற்கு விரோதமான மசோதாக்களை எதிர்க்க வேண்டியநிலை ஏற்பட்டது. இதஞல் கட்சியிலுள்ள சிலர் தங்கள் எண்ணப்படி திரு. டட்லி சேனநாயக்காவுக்கு ஆதரவாக நான் நடக்கவில்லை என்ற காரணத்தால் என்னை தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேற்றினர். எனவேதான் தமிழினத்தைப் பாதுகாக்க ஒரு புதிய பாதையை உருவாக்க வேண்டும். இந்த இனத்தின் பிரச்னைக்கு ஒரு முழுமையான தீர்வுகாண வேண்டும். இதற்கு எனது தொகுதிமக்கள் முன்னேடியாகத் திகழவேண்டும்.

திரு. நவரத்தினத்தின் சேவைகள் பற்றிக் கூட்டத் தலைவர் திரு. செ. தவவிஞயகம் குறிப்பிட்டார். இக் கூட்டத்தில் கிராமசபை உறுப்பினர்கள் திரு. சி அருளம்பலம், திரு. மு, அருணசலம் ஆகியோர் உட்படப் பலர் கருத்துத் தெரிவித்தனர்.

## அலங்கார உற்சவம்

சண்டிலிப்பாய், ஞா

சண்டிலிப்பாய் சீரணி ஞான உபானந்த வைரவ சுவாமி கோவில் அலங்கார உற்சவம் இன்று விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெறும்.

கலைவாணி நாடகமன்றத்தினரின் நவீன மந்தரை சூழ்ச்சிப்படலம்' என்றநாடகமும் அதைத் தொடர்ந்து சண்டிலிப்பாய் அம்பாள் நாடகமன்றம் அளிக்கும் 'கிருஷ்ண - அருச்சுன' என்ற சமூகநாடகமும்இரவு இடம் பெறும்.

## ரூபா 100 அபராதம்

வல்வெட்டித்துறை, சனி

வல்வெட்டித்துறைப் பொலிசார் இப் பகுதியிலுள்ள வீடொன்றில் ரூபா 2000 பெறுமதியான 16 வெளி நாட்டுச் சேலைகள் இருக்கக் கண்டுபிடித்தனர்.

அச் சேலைகளை பறிமுதல் செய்து அவ் வீட்டிலுள்ள நபர் ஒருவரை கைதுசெய்து சுங்க இலாகாவிடம் ஒப்படைத்தபோது சுங்க இலாகாவினர்விசாரணையின் பின்னர் சேலைகளை பறிமுதல் செய்து அந் நபருக்கு ரூபா 100 அபராதம் விதித்தனர்.

## பீஹார் காங்கிரஸ் மந்திரிசபை தோல்வி

புதுடில்லி, ஜூன்.21

பீஹகார் காங்கிரஸின் கூட்டு மந்திரிசபையை நேற்று எதிர்க் கட்சிகள் தோற்கடித்தன, கால்நடை வளர்ப்பு செலவுக் கோரிக்கை மீதான ஒரு வாக்கெடுப்பிலேயே எதிர்க்கட்சிகள் ஆளும் கட்சியைவிட அதிக எண்ணிக்கையைப் பெற்றதாக அறிவிக்கப்பட்டது.


ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

ஜெய்சங்கர் வரலக்ஷ்மி நடித்த

உயிரா மானமா

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்


★ சிவாஜிகணேசன் ★ பத்மினி
★ கே. ஆர். விஜயா ★ நாகேஷ்

நடித்த

திருமால் பெருமை

மகத்தான 4-வது வாரம்

இங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)



ஜெய்சங்கர் ★ ஜெயலலிதா ★ நாகேஷ் ★ குமாரி சச்சு ★ சோ, மஞேரமா (சொந்தக் குரலில் பாடி) நடித்த

நகைச்சுவைச் சித்திரம்

பொம்மலாட்டம்

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
ராஜ் (நீர்கொழும்பு) ஸ்ரீ கிருஷ்ண (திருமலை)

ஆகிய திரைகளில் திரையிடப்படுகின்றது.

ஸ்ரீதரின் கதை, வசனம், டைரக்ஷனில் உருவாகி

சிவாஜி, கே. ஆர். விஜயா முத்துராமன், கீதாஞ்சலி, பாண்டியன் நடித்த

நெஞ்சிருக்கும் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org